بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 8

இதழ் 27

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்தூர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1444 - துல்ஹஜ் 17 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - வஃபா 06 ★ 06 ஜூலை 2023


## அல்லாஹ்வின் கட்டளை

وَلَا تَمۡشِ فِی الۡاَرۡضِ مَرَحًا ۚ اِنَّکَ لَنۡ تَخۡرِقَ الۡاَرۡضَ وَلَنۡ تَبۡلُغَ الۡجِبَالَ طُوۡلًا ﴿۳۸﴾

**பொருள் :**

பூமியில் ஆணவங் கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது.

(பனீ இஸ்ராயீல் : 38)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இறைவன் புறமிருந்து தோன்றக் கூடியவர்களிடம் படைப்பினங்களின் மீதான வேதனையும், மனித குலத்தின் நன்மையை நாடுவதற்கான ஒரு துடிப்பும் இருக்கின்றது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எல்லையற்ற வேதனையும் துடிப்பும் இருந்தது என்று திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகின்றது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### நபியின் தாய் உள்ளம்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவிற்கு வேதனையும் துடிப்பும் இருந்தது? என்பது திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகின்றது.

لَعَلَّکَ بَاخِعٌ نَّفۡسَکَ اَلَّا یَکُوۡنُوۡا مُؤۡمِنِیۡنَ ﴿۳﴾

என்று அல்லாஹ் கூறியுள்ளான். பொருள்: இவர்கள் ஏன் நம்பிக்கை கொள்வதில்லை என்ற கவலையில் நீர் உம்மை நீரே மாய்த்துக் கொள்வீரோ? (அஷ்ஷுஃரா: 4) ஒவ்வொரு நபியும் வெறும் சொற்களைக் கொண்டு வருவதில்லை. மாறாக, தமது சமுதாயத்தின் சீர்திருத்தத்திற்காக வருகின்ற அவர் தமக்குள் ஒரு வலியையும், வேதனையையும் கொண்டிருக்கின்றார். இந்த வலியும், வேதனையும் எந்தவொரு செயற்கைத் தன்மையால் இருப்பதில்லை. மாறாக, இயல்பாகவே அவரிடமிருந்து வேதனை வெளிப்படுகின்றது. ஒரு தாய் தனது குழந்தையை பராமரிப்பதில் மும்முரமாக இருப்பதைப் போன்று அவர் இருக்கின்றார். நீ உனது குழந்தைக்கு பாலூட்டவில்லையென்றாலும் அதனால் ஒன்றிரண்டு குழந்தைகள் இறந்துவிட்டாலும் கூட உனக்கு மன்னிப்பு கிடைக்கும்; உன்னிடம் எந்தக் கேள்வியும் கேட்கப்பட மாட்டாது என்று அரசன் புறமிருந்து ஒருதாய்க்கு கட்டளை வழங்கப்பட்டுவிட்டாலும் கூட அரசனின் அதுபோன்ற கட்டளையால் ஒரு தாய் மகிழ்ச்சியடைய முடியுமா? ஒருபோதும் இல்லை. மாறாக, அந்த அரசனை அவள் ஏசிபேசுவாள். அவளால் குழந்தைக்கு பாலூட்டுவதில் இருந்து விலகியிருக்கவே முடியாது. இந்த விஷயம் அவளது இயல்பிலேயே இயற்கையாகவே இருக்கின்றது. மேலும், தான் சொர்க்கத்திற்கு செல்ல வேண்டும் அல்லது அதற்கான கூலியை பெற வேண்டும் என்பது பாலூட்டுவதில் ஒருபோதும் அவளது நோக்கமாகவோ எண்ணமாகவோ இருப்பதில்லை. இதேபோன்று இறைவன் புறமிருந்து தோன்றக் கூடியவரின் இயல்பிலும் ஒரு விஷயம் இருக்கின்றது. அது என்னவென்றால், படைப்பினங்களின் மீது வேதனையும், மனிதகுலத்தின் நன்மைக்கான ஒரு துடிப்பும் அவர்களிடம் இருக்கின்றது. மக்கள் விரைவாக நேர்வழி பெற வேண்டும். மேலும், இறைவனிடத்தில் வாழ்வை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இயல்பிலேயே அவர் விரும்புகின்றார்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 463, காதியான் பதிப்பு -2003)

## எனவே ஆணவம் கொள்ளாதே! உன்னிடத்தில் ஏதாவது உலகியல் சிறப்பு உள்ளதென்றால் சமுதாயத்தின் தலைவராக ஆகிவிடுவதற்காக அதன் உதவியால் நீ சமுதாயத்திற்கு நன்மை பயப்பாயாக. ஏதாவது மார்க்கச் சிறப்பு இருக்குமென்றால் அதன் மூலம் சமுதாயத்திற்கு நன்மை பயப்பாயாக. அதனால் நீ இறைவனின் பார்வையில் விருப்பத்திற்குரியவராக ஆகிவிடலாம்

وَلَا تَمۡشِ فِی الۡاَرۡضِ مَرَحًا ۚ اِنَّکَ لَنۡ تَخۡرِقَ الۡاَرۡضَ وَلَنۡ تَبۡلُغَ الۡجِبَالَ طُوۡلًا ﴿۳۸﴾ (17:38)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்: உங்களிடத்தில் ஒரு சிறப்பு இருக்குமென்றால் பின்னர் அதனை ஆணவத்திற்கான வழிமுறையாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். ஏனெனில், இதனால் நீங்கள் நன்மைகளிலிருந்து இழப்பிற்குரியவர்களாக ஆகிவிடுவீர்கள். மேலும், உங்களால் எதிர்காலத்தில் முன்னேற்றத்தின் பக்கம் அடியெடுத்து வைக்க முடியாது. ஏனெனில், ஆணவம் கொள்கின்ற நபர், தான் உச்சபட்ச முன்னேற்றத்தை அடைந்து விட்டதாகக் கருத் தொடங்கிவிடுகின்றார். இரண்டாவது, இதில் இதன் பக்கமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது: அதாவது, மனிதனே! உனது முன்னேற்றத்தின் இறுதி (எல்லை) மனிதனின் முன்னேற்றம் ஆகும். எனவே மனிதர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அளவிற்கு மகிழ்ச்சி கொள். மேலும், நீ உமது திறமைகளைப் பெற்றிருந்தபோதிலும் பூமியை பிளந்து விட முடியாது. அதாவது, பூமியை தாண்டி சென்று விட முடியாது. இதன் பொருள் என்னவென்றால், இறுதியில் நீ இந்தப் பூமியிலேயே வசிக்க வேண்டும். உனது முன்னேற்றங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. எனவே மனிதர்களுடன் நீ வாழ்க்கை நடத்துவதே உனக்கு கடினமாகி விடும் அளவிற்கு உன்னை நீ

**இதன் தொடர்ச்சி : 12ம் பக்கம்**

## நபிமொழி

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடனிலிருந்து தப்பிப்பதற்கு துஆ வேண்டி வந்தார்கள்

(2397) ஹஸ்ரத் ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தொழுகையில் துஆ செய்து வந்தார்கள். மேலும், இவ்வாறு கூறி வந்தார்கள்: எனது அல்லாஹ்வே! நான் பாவத்திலிருந்தும், கடன்படுவதிலிருந்தும் உன்னிடம் அடைக்கலம் வேண்டுகின்றேன். (அப்போது) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் கடன்படுவதிலிருந்து மிகவும் அதிகமாக அடைக்கலம் வேண்டுகின்றீர்கள் என்று கேட்கக் கூடிய ஒரு நபர் கேட்டார். அதற்கு) மனிதன் கடனாளியாக ஆகிவிடும்போது பேசும் போது பொய்யுரைக்கின்றான்; வாக்குறுதி செய்தால் மீறிவிடுகின்றான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த துஆவை வேண்டி வந்தார்கள்:

அதன் பொருள்: அல்லாஹ்வே! நான் கவலையிலிருந்தும், துன்பத்திலிருந்தும் உன்னிடம் அடைக்கலம் வேண்டுகின்றேன். மேலும், நான் உன்னிடம், ஆதரவற்ற நிலையிலிருந்தும் சோம்பலிலிருந்தும் (அதாவது வசதி வாய்ப்புகள் இருந்தும் அதனை பயன்படுத்தாமல் இருப்பதிலிருந்தும்) அடைக்கலம் வேண்டுகின்றேன். மேலும், கோழைத்தனத்திலிருந்தும், கருமித்தனத்திலிருந்தும் நான் உன்னிடம் அடைக்கலம் வேண்டுகின்றேன். மேலும், நான் உன்னிடம் ஏழ்மை மற்றும் வறுமையிலிருந்தும் அடைக்கலம் வேண்டுகின்றேன். மேலும் கடன் மேலோங்கி விடுவதிலிருந்தும், மக்களின் அழுத்தத்திற்கு ஆளாகுவதிலிருந்தும் உன்னிடம் நான் அடைக்கலம் வேண்டுகின்றேன்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் இஸ்திக்ராழ், காதியான் பதிப்பு 2008 ஆம் ஆண்டு)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாற்றின் ஒளியில் பத்ர்ப் போரின் பின்னணியைக் குறித்த பேருரை**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை நமது வாழ்வின் அச்சாணி ஆகும். மேலும் அதுவன்றி நமது மார்க்கமும், நமது ஈமானும் முழுமையடைய முடியாது. மேலும், அல்லாஹ்வால் அனுப்பப்பட்டுள்ள ஷரீஅத்தின்படி அமல் செய்யப்படவும் முடியாது.**

**யூ.கேவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய கவாஜா முனீருத்தீன் கமர் ஸாஹிப், வாழ்வை அர்ப்பணித்தவரும், ரப்வா ஃபஸ்லே உமர் மருத்துவமனையின் மருத்துவருமான மதிப்பிற்குரிய ஸாஹிப்ஸாதா மிர்ஸா முபஷ்ஷிர் அஹ்மத் ஸாஹிப், இஸ்லாமாபாத் பாகிஸ்தானைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஸய்யிதா அமத்துல் பாஸிதா ஸாஹிபா, ஃபைஸலாஃபாத் சதர் ஜமாஅத் மதிப்பிற்குரிய ஷரீஃப் அஹ்மத் பந்தேஷா ஸாஹிப் ஆகியோரின் மரணத்தையொட்டி அவர்களின் நற்குறிப்பும், ஜனாஸா காயிப் தொழுகையும்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் தங்கியிருந்த வரை அன்னார் (ஸல்) எல்லா வகையான அநீதிகளையும் சகித்துக் கொண்டார்கள். ஆனால், குரைஷிகளுக்கு எதிராக வாளேந்தவில்லை. ஏனெனில், குரைஷிகளுக்கு எதிராக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்னதாக அல்லாஹ்வின் நடைமுறைக்கு ஏற்ப அவர்கள் மீது சான்றுகள் முழுமை செய்யப்படுவது அவசியமானதாக இருந்தது**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 02 ஜூன் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **02ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

பத்ர்ப் போர் ஸஹாபிகளின் வாழ்வின் அம்சம், அவர்களின் அறிமுகம் மற்றும் அவர்களின் தியாகங்களை நான் ஒரு குத்பாவின் தொடரில் எடுத்துரைத்து வந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்காவிட்டால் பின்னர் ஏக்கம் எஞ்சியிருக்கும் என்று ஏராளமான மக்கள் தமது விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள். எனக்கு (கடிதம்) எழுதவும் செய்திருந்தார்கள். ஏனெனில், உண்மையில் அச்சாணி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இருப்பாக இருந்தது. அதனைச் சுற்றி ஸஹாபிகள் வலம் வந்தார்கள். அதனுடன் இணைந்து, தியாகங்கள் செய்து ஸஹாபிகள் தன்னிகரற்ற தரத்தை அடைந்தார்கள். மேலும், புதுப்புது வழிமுறைகளை கற்றார்கள். மேலும் ஏகத்துவத்தை பரப்புவதற்கும், மேலும் சுயம் அதன் செயல் முன்மாதிரியாக ஆகுவதற்கும் எப்படிப்பட்ட தரத்தை நிலைநிறுத்தினார்கள் என்றால் அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றல் மற்றும் அல்லாஹ்வின் சிறப்பு மிகு நேசராக இருந்ததற்கும் சான்று ஆகும்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைப்பதும் அவசியம் ஆகும். கடந்த ஆண்டுகளில் பல்வேறு தருணங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைக் குறித்து குத்பாக்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், எவ்வாறு இருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு எப்படிப்பட்டதென்றால் அதனை முழுமையாக எடுத்துரைத்து விட முடியாது. ஒவ்வொரு பண்பும் எப்படிப்பட்டதென்றால் அதனை பல குத்பாக்களிலும் கூட எடுத்துரைத்து விட முடியாது. மேலும், இந்த வாழ்க்கை வரலாறு இன்ஷாஅல்லாஹ் அவ்வப்போது எடுத்துரைத்தும் வரப்படும். இன்னும் கூறப்போனால் ஒவ்வொரு குத்பாவிலும், சொற்பொழிவிலும் ஏதாவது ஒரு அம்சம் ஏதாவது ஒரு வடிவில் எடுத்துரைக்கப்பட்டும் வருகின்றது. ஏனெனில், இதுவே நமது வாழ்க்கையின் அச்சாணி ஆகும். மேலும், இதுவன்றி, நமது மார்க்கம், நமது ஈமான் முழுமையடைய முடியாது. மேலும் அல்லாஹ்வால் அருளப்பட்ட ஷரீஅத்தின்படி செயல்படவும் முடியாது.

எவ்வாறு இருப்பினும், தற்போது நான் பத்ர்ப் போரின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் அம்சம் மற்றும் வரலாற்றுச் சம்பவங்களை எடுத்துரைப்பேன். மேலும் இந்தத் தொடர் எதிர்காலத்தில் சில குத்பாக்களிலும் நடைபெறும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியே ஸஹாபா பெருமக்களுக்கு தன்னலமற்ற தியாகங்கள் செய்வதற்கான உத்வேகத்தை வழங்கியது. மேலும், இந்த உத்வேகம் போர் வீரர்களிலும், உயிர் தியாகிகளிலும், அல்லாஹ்வின் நேசர்களிலும், அல்லாஹ் திருப்தி கொண்டவர்களைச் சேர்ந்தவர்களிலும் அவர்களை இணைத்தது. மேலும், அதன் முன்மாதிரிகளை நாம் நமது வாழ்க்கைகளிலும் பார்த்தோம்.

எனவே இந்தப் போரின் அடிப்படையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை எடுத்துரைப்பது அவசியம் ஆகும். போரின் சம்பவங்களை எடுத்துரைப்பதற்கு முன்னர் எந்த காரணங்களால் போர் நடைபெற்றதோ அவற்றை எடுத்துரைப்பதும் அவசியம் ஆகும். எனவே முதலில் அதன் சில பின்னணியையும் எடுத்துரைப்பேன். அதன் பின்னணியில் இருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறும், அன்னாரால் கொண்டு வரப்பட்ட அழகிய போதனையின் பல்வேறு அம்சமும் வெளிப்பட்டு விடுகின்றது.

பத்ர்ப் போருக்கான காரணிகளை எடுத்துரைத்தவாறு ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மக்கா வாழ்வில் குரைஷியர்களால் முஸ்லிம்கள் மீது என்னென்ன கொடுமைகள் இழைக்கப்பட்டனவோ மேலும், இஸ்லாத்தை அழிப்பதற்கு அவர்கள் என்ன முயற்சிகளை மேற்கொண்டார்களோ அவை எல்லா காலத்திலும் எல்லா வகையான நிலைமைகளிலும் இரண்டு சமுதாயங்களுக்கிடையில் போர் மூள்வதற்கு போதுமான காரணமாகும். வரலாற்றிலிருந்து இந்த விஷயம் நிரூபணமாகின்றது: அதாவது, மோசமான எள்ளி நகையாடக்கூடிய ஏளனம் மற்றும் உள்ளத்தை மிகவும் காயப்படுத்தக் கூடிய ஏச்சுப் பேச்சுகளை செய்தது

மட்டுமின்றி மக்கத்து காஃபிர்கள் முஸ்லிம்களை ஏக இறைவனின் வணக்கத்திலிருந்தும், ஏகத்துவத்திற்கான அறிவிப்பிலிருந்தும் பலவந்தமாக தடுத்து நிறுத்தினார்கள். மேலும் அவர்களை கருணையற்ற முறையில் அடித்து உதைத்தார்கள். அவர்களின் செல்வங்களை ஆகுமற்ற வழிமுறையில் அபகரித்துக் கொண்டனர். அவர்களை சமூகப் புறக்கணிப்பு செய்து அவர்களை அழித்து ஒழிப்பதற்கு முயற்சிகள் செய்தனர். அவர்களில் சிலரை கொடூரமான முறையில் கொன்றனர். அவர்களின் பெண்களை இழிவுபடுத்தினர். எந்த அளவுக்கென்றால், இந்த அநீதிகளால் தொல்லைக்குள்ளாகி ஏராளமான முஸ்லிம்கள் மக்காவை விட்டு விட்டு அபிசீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்றனர். ஆனால், குரைஷியர்கள் அதனையும் பொறுத்துக் கொள்ளவில்லை. மேலும், நஜ்ஜாஷி மன்னரின் அவையில் தங்களது ஒரு குழுவை அனுப்பி எப்படியாவது இந்த முஹாஜீர்களை மீண்டும் மக்காவிற்கு திருப்பிக் கொண்டு வந்துவிட வேண்டும்; மேலும், அவர்களை இஸ்லாத்திலிருந்து விலக்குவதில் வெற்றி பெற்று விட வேண்டும் அல்லது அவர்களை அழித்து விட வேண்டும் என்று குரைஷிகள் முயற்சி செய்தனர். பின்னர், தங்களது உயிரை விடவும் அன்பிற்குரியவராக கருதி வந்த முஸ்லிம்களின் எஜமானருக்கும், தலைவருக்கும் எதிரிகள் கடும் துன்பங்களை கொடுத்தனர். மேலும், எல்லா வகையான இன்னல்களுக்கும் ஆளாக்கினர். தாயிஃப் நகரத்தில் ஏக இறைவனின் பெயரைக் கூறிய காரணத்திற்காக குரைஷிகளின் சகோதரர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கற்களை வீசினர். எந்த அளவிற்கு என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உடல் இரத்தத்தால் நனைந்து விட்டது. மேலும், இறுதியில் இஸ்லாத்தின் பெயரையும், அடையாளத்தையும் அழித்து விடுவதற்காகவும், ஏகத்துவத்திற்கு நிரந்தரமாக முடிவு கட்டிவிட வேண்டும் என்பதற்காகவும், இறைத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களை கொன்று விட வேண்டும் என்று மக்காவின் சமுதாய நாடாளுமன்றத்தில் அனைத்து குரைஷிய கோத்திரங்களின் பிரதிநிதிகளும் ஒன்றுபட்டு முடிவெடுத்தனர். பின்னர் இந்த கொலைகார தீர்மானத்திற்கு செயல் வடிவம் கொடுப்பதற்காக மக்காவின் பல்வேறு குரைஷிய கோத்திரங்களைச் சேர்ந்த இளைஞர்கள் இரவு நேரத்தில் ஒரு குழுவினராக ஒன்றுதிரண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தினர். ஆனால், இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாத்துவிட்டான். மேலும், அன்னார் (ஸல்) எதிரிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு தமது வீட்டிலிருந்து புறப்பட்டுவிட்டார்கள். மேலும், தவ்ர் குகையில் சென்று அடைக்குலம் புகுந்தார்கள். இந்த அநீதிகளும், இந்த கொலைகார தீர்மானமும் குரைஷியர்களின் புறமிருந்து போருக்கான அறிவிப்பின் கட்டளையாக இருக்கவில்லையா என்ன? இந்தக் காட்சிகளைக் கண்ட பிறகு மக்கத்து குரைஷிகள் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக போருக்கு ஆயத்தமாக இருக்கவில்லை என்று எந்தவொரு அறிவுபடைத்த மனிதராவது எண்ணம் கொள்ள முடியுமா? இதன் பிறகு, முஸ்லிம்கள் புறமிருந்து தற்காப்பு போர் புரிவதற்கு குரைஷிகளின் இந்த அநீதிகள் போதுமான முகாந்திரத்தை கொண்டதாக இருக்க முடியாதா என்ன? உலகில் தற்கொலை செய்து கொள்வதற்கு எண்ணம் கொண்டிராத சுயமரியாதை கொண்ட ஒரு சமுதாயம் இந்த நிலைமைகளைக் கண்ட பிறகு குரைஷிகள் முஸ்லிம்களுக்கு விடுத்த இதுபோன்ற மிரட்டல்களை எதிர் கொள்வதிலிருந்து பின்தங்கி இருந்து விடுமா என்ன?

நிச்சயமாக, நிச்சயமாக முஸ்லிம்களின் இடத்தில் வேறொரு சமுதாயம் இருந்திருந்தால் பின்னர் அது இதற்கு முன்னரே குரைஷிகளுக்கு எதிராக போர் மைதானத்தில் இறங்கியிருக்கும். ஆனால், முஸ்லிம்களுக்கு அவர்களின் எஜமானர் புறமிருந்து பொறுமை மற்றும் மன்னிப்பை கைகொள்ளும்படி கட்டளை வழங்கப்பட்டிருந்தது. ஆக, எழுதப்பட்டுள்ளது: மக்காவில் குரைஷிகளின் அநீதிகள் அதிகரித்துவிட்டபோது அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் மற்றும் ஏனைய ஸஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி குரைஷிகளுக்கு எதிராக போரிடுவதற்கு அனுமதி வேண்டினார்கள். ஆனால்,

اِنِّیْ اُمِرْتُ بِالْعَفْوِ فَلَا تُقَاتِلُوْا

என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அதாவது, எனக்கு இதுவரை மன்னிப்பதற்கே கட்டளை வழங்கப்பட்டுள்ளது. எனவே போரிடுவதற்கு நான் உங்களுக்கு அனுமதி தர முடியாது.

எனவே, ஸஹாபா பெருமக்கள் மார்க்கத்தின் வழியில் எல்லா வகையான துன்பங்களையும், இழிவையும் சகித்துக் கொண்டார்கள். ஆனால், பொறுமையை கைவிட்டுவிடவில்லை. எந்த அளவிற்கு என்றால், குரைஷிகளின் அநீதிகள் எல்லை மீறி சென்றிருந்தது. மேலும், ஞானமிக்க இறைவனின் பார்வையில் அனைத்து சான்றுகளையும் முழுமை செய்வதற்கான காலம் முழுமையடைந்திருந்தது. அப்போது, நீ! இந்த நகரத்திலிருந்து வெளியேறி விடு. தற்போது விவகாரம் மன்னிப்பின் எல்லையை கடந்து விட்டது. மேலும் தற்போது அநீதியாளர்கள் தங்களது முடிவை அடைவதற்கு நேரம் வந்து விட்டது என்று இறைவன் தனது அடியாருக்கு கட்டளையிட்டான். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த ஹிஜ்ரத் குரைஷிகளின் சவாலை ஒப்புக் கொள்வதற்கான அடையாளமாக இருந்தது. மேலும் இதில் இறைவன் புறமிருந்து போர் பிரகடனத்திற்கான ஒரு மறைமுக சைகை இருந்தது. அதனை முஸ்லிம்கள் மற்றும் நிராகரிப்பாளர்கள் இருவரும் புரிந்திருந்தனர். ஆக, கஃபத்துல்லாஹ்விற்கு அருகில் குரைஷிகளின் ஆலோசனை செய்வதற்குரிய இடமான தாருன் நத்வாவில் ஆலோசனை செய்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மக்காவிலிருந்து வெளியேற்றி விடலாம் என்று ஒரு நபர் ஆலோசனை வழங்கியபோது குரைஷியத் தலைவர்கள் இந்த ஆலோசனையை இந்த அடிப்படையிலேயே நிராகரித்தார்கள். அதாவது, முஹம்மது (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து வெளியேறிவிட்டால் பின்னர் நிச்சயமாக முஸ்லிம்கள் சவாலை ஒப்புக் கொண்டு நமக்கு எதிராக போர் மைதானத்தில் இறங்கி விடுவார்கள் என்ற காரணத்தின் அடிப்படையில்தான் அந்த ஆலோசனையை நிராகரித்தார்கள். மேலும், பைஅத்தே உக்பா ஸானியாவின் சந்தர்ப்பத்தின்போது மதீனாவின் அன்ஸார் சகோதரர்களின் முன்னிலையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்திற்கான கேள்வி எழுந்தபோது, நாம் முழு அரேபியாவிற்கு எதிரிலும் போருக்கு ஆயத்தமாகி விடவேண்டும் என்பதே இதன் பொருள் ஆகும் என்று அவர்கள் உடனடியாக கூறினர். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே மக்காவிலிருந்து வெளியேறியபோது மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவின் வாசல் மற்றும் சுவரை ஏக்கம் நிறைந்த பார்வையுடன் பார்த்தபோது இவ்வாறு கூறினார்கள்: மக்காவே! நீ எனக்கு அனைத்து ஊர்களிலும் மிகவும் நேசத்திற்குரிய ஊராக இருந்தாய். ஆனால், உனது குடிமக்கள் என்னை இங்கு வசிக்க விடவில்லை.

எனவே அப்போது, அவர்கள் இறைவனின் தூதரை அவரது நாட்டிலிருந்து வெளியேற்றிவிட்டனர். இனி இந்த மக்கள் நிச்சயமாக அழிந்துவிடுவார்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் கூறினார்கள்.

சுருக்கமான விஷயம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் தங்கியிருந்த வரை அன்னார் (ஸல்) எல்லா வகையான அநீதிகளையும் சகித்துக் கொண்டார்கள். ஆனால், குரைஷிகளுக்கு எதிராக வாளேந்தவில்லை. ஏனெனில், குரைஷிகளுக்கு எதிராக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்னதாக அல்லாஹ்வின் நடைமுறைக்கு ஏற்ப அவர்கள் மீது சான்றுகள் முழுமை செய்யப்படுவது அவசியமானதாக இருந்தது. மேலும், அதற்கு அவகாசம் தேவைப்பட்டிருந்தது. இரண்டாவதாக, ஓர் அறிவுடையவரின் பார்வையில் அழகிய செயலாக கருதப்பட முடியாத அளவிலான அதாவது இதற்கு பிறகு இனி அமைதியாக இருப்பது தற்கொலைக்கு சமமாகிவிடும் என்ற இறுதி நிலையை அடையும் வரை முஸ்லிம்கள் மன்னித்தல் மற்றும் பொறுமையின் முன்மாதிரியைக் காட்ட

வேண்டும் என்பது இறைவனின் விருப்பமாக இருந்தது. மூன்றாவதாக, மக்காவில் குரைஷிகளின் ஒரு வகையான ஜனநாயக ரீதியிலான அரசாங்கம் நிலைபெற்றிருந்தது. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதன் குடிமக்களில் ஒரு குடிமகனாக இருந்தார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் இருக்கும் வரை அன்னார் (ஸல்) அந்த அரசாங்கத்திற்கு கண்ணியமளித்து வருவதும், சுயமே அமைதியை சீர்குலைக்கும் எந்த விஷயத்தையும் செய்யாமல் இருப்பதும் அழகிய அரசியலின் தேட்டமாக இருந்தது. மேலும், விவகாரம் மன்னிப்பின் எல்லையை கடந்து சென்றுவிடும்போது அன்னார் (ஸல்) அங்கிருந்து ஹிஜ்ரத் செய்து சென்றுவிட வேண்டும் என்பதும் அதன் தேட்டமாக இருந்தது.

நான்காவதாக இந்த விஷயமும் அவசியமானதாக இருந்தது. அதாவது, அன்னாரின் சமுதாயம் தனது நடவடிக்கைகளின் காரணமாக இறைவனின் பார்வையில் தண்டனைக்கு தகுதியானதாக ஆகிவிடும் வரையிலும், அவர்களை அழிப்பதற்கான நேரம் வந்து விடாத வரையிலும் அன்னார் (ஸல்) அந்த மக்களுக்கு மத்தியில் இருப்பதும், பின்னர் அந்த நேரம் வந்துவிடும்போது அன்னார் (ஸல்) அங்கிருந்து ஹிஜ்ரத் செய்துவிட வேண்டும் என்பதும் அவசியமானதாக இருந்தது. ஏனெனில், அல்லாஹ்வின் நடைமுறைக்கு ஏற்ப நபி தனது சமுதாயத்திற்கு மத்தியில் இருக்கும் வரை அந்த சமுதாயத்தை அழிக்கக் கூடிய தண்டனை இறங்குவதில்லை. மேலும், அழிவிற்கான தண்டனை வரும்போது பின்னர் அங்கிருந்து சென்றுவிடும் படி நபிக்கு கட்டளை வழங்கப்படுகின்றது. இந்தக் காரணங்களால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் தன்னகத்தே சிறப்பான சைகைகளை கொண்டிருந்தது. ஆனால், வேதனை என்னவென்றால், அநியாயக்கார அந்த சமுதாயம் அதனை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. மேலும், அநீதியிலும் வரம்பு மீறுதலிலும் முன்னேறிச் சென்றது. அவ்வாறில்லையென்றால், அப்போது கூட குரைஷிகள் விலகியிருந்தால் மேலும், மார்க்க விவகாரத்தில் பலவந்தத்துடன் செயல்படுவதை கைவிட்டிருந்தால் மேலும் முஸ்லிம்களை அமைதியுடன் வாழ்க்கை நடத்துவதற்கு அனுமதித்து இருந்தால், பின்னர் அளவற்ற அருளாளனும், மேன்மேலும் கருணை காட்டக் கூடியவனுமாகிய இறைவனும், அகில உலகங்களுக்கும் அருட்கொடையாக இருந்த அவனது தூதரும் நிச்சயமாக அப்போது கூட அவர்களை மன்னித்திருப்பார்கள். மேலும், அரேபிய சமுதாயம் கண்ட அந்தப் போர் மற்றும் இரத்தம் சிந்துதலின் காட்சிகளை அது கண்டிருக்காது. ஆனால், இறை நியதியின் வெளிப்பாடுகள் முழுமையடைய வேண்டியதிருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் குரைஷிகளின் பகைமையுணர்வில் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுகின்ற பணியை செய்தது. அவர்கள் மேலும் ஆக்ரோஷத்துடன் இஸ்லாத்தை அழிப்பதற்காக எழுந்து நின்றனர்.

இன்னும் மக்காவிலேயே தங்கியிருந்த அந்த ஏழைகளான மற்றும் பலவீனர்களான முஸ்லிம்களின் மீது அநீதி இழைத்தது மட்டுமல்லாமல் இந்தப் பணியை குரைஷிகள் முதன் முதலில் செய்தனர். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து தப்பிச் சென்று விட்டார்கள் என்பதை அவர்கள் அறிந்த உடனேயே அவர்கள் அன்னாரைப் பிடிப்பதற்காக புறப்பட்டுச் சென்றனர். மேலும் மக்காப் பள்ளத்தாக்கின் மண்ணின் ஒவ்வொரு மூலையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தேடுவதற்காக சோதனையிட்டார்கள். மேலும், குறிப்பாக தவ்ர் குகையின் வாசல் வரை கூட சென்றடைந்து விட்டனர். ஆனால், அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உதவி செய்தான். மேலும், குரைஷிகளின் கண்களில் எப்படிப்பட்ட திரையிட்டான் என்றால் அவர்கள் சரியான இடத்தையும், இலக்கையும் அடைந்த பிறகும் தோல்வியுற்று வெறும் கையுடன் திரும்பிவிட்டனர். அவர்கள் அந்த தேடுதலில் நிராசையடைந்து விட்ட போது பின்னர் அவர்கள் பொது அறிவிப்பு செய்தனர். அதாவது, எந்த நபர் முஹம்மது (ஸல்) அவர்களை உயிருடனோ அல்லது பிணமாகவோ (நவூதுபில்லாஹ்) பிடித்து வந்தாலும் அவருக்கு (இன்றைய நாட்களின் விலையின் அடிப்படையில் சுமார் 20,000 ரூபாய் மதிப்பிலான) நூறு ஒட்டகங்கள் பரிசாக வழங்கப்படும் என்று அவர்கள் அறிவித்தனர்.

இது ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய அந்தக் காலத்தின் அதாவது 1931 ஆண்டின் மதிப்பாகும். இன்றைய காலத்தில் அதன் மதிப்பு கோடிக்கணக்கான ரூபாய் ஆகும். அவருக்கு நூறு ஒட்டகங்கள் கொடுக்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. அது கோடிக்கணக்கான ரூபாய் பரிசுக்கான பேராசையாக இருந்தது.

இந்த பரிசின் பேராசையில் பல்வேறு கோத்திரங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தேடுவதற்காக நாலாப்புறமும் புறப்பட்டுச் சென்றிருந்தனர். ஆக, அவர்களில் ஒருவராக ஸுராகா பின் மாலிக்கும் பின்தொடர்ந்து சென்றது இதே பரிசுக்கான அறிவிப்பின் விளைவாக இருந்தது. ஆனால், அந்தத் திட்டத்திலும் குரைஷிகளுக்கு தோல்வியின் முகத்தையே பார்க்க நேரிட்டது. சிந்தித்துப் பார்த்தால், ஒரு சமுதாயத்தின் எஜமானர் மற்றும் தலைவரைக் குறித்து மற்றொரு சமுதாயம் இதுபோன்ற பரிசை நிர்ணயிப்பதே இரண்டு சமுதாயங்களுக்கு மத்தியில் போர் மூண்டு விடுவதற்கு போதுமான ஒரு காரணம் ஆகும். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம். ஏ, அவர்களின் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூல், பக்கம் 298 -300)

இதேபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்றுவிட்ட போது பின்னர் குரைஷிகள் மதீனாவின் தலைவர் அப்துல்லாஹ் பின் அபீ மற்றும் அவரது தோழர்களின் பெயரில் இவ்வாறு மிரட்டல் கடிதம் ஒன்றை எழுதினர். நீங்கள் எங்களது தோழருக்கு அடைக்கலம் கொடுத்துள்ளீர்கள். மேலும், நாங்கள் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றோம். ஒன்று நீங்கள் நிச்சயம் அவருடன் சண்டையிட வேண்டும் அல்லது அவரை நாட்டை விட்டு வெளியேற்றி விட வேண்டும். இல்லையென்றால் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து உங்கள் மீது போர் தொடுப்போம். மேலும், உங்களின் போர் வீரர்களைக் கொன்று விடுவோம். மேலும், உங்களது பெண்களை எங்களது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்வோம்.

இந்தக் கடிதம் அப்துல்லாஹ் பின் அபீ மற்றும் அவனது கூட்டாளிகளுக்கு கிடைத்தபோது, அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் போர் புரிவதற்காக ஆயத்தமாகி விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தி கிடைத்தபோது அன்னார் (ஸல்), அவர்களை சென்று சந்தித்தார்கள். மேலும் கூறினார்கள்: குரைஷிகள் உங்களுக்கு கொடுத்த மிரட்டல் உங்களது பார்வையில் பெரிய மிரட்டல் ஆகும். ஆனால், எந்த அளவிற்கு உங்களுக்கு நீங்களே பாதிப்பை ஏற்படுத்திக் கொள்வீர்களோ அந்த அளவிற்கு கூட அவர்களால் உங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த முடியாது. நீங்கள் உங்களுடைய மகன்கள் மற்றும் சகோதரர்களுடன் போர் செய்வதற்கு விரும்புகின்றீர்களா? ஏனென்றால் அவர்களில் ஏராளமானோர் முஸ்லிம்களாகிவிட்டனர்.

யூதர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து இந்த விஷயத்தை செவிமடுத்தபோது அவர்கள் இங்கும் அங்கும் (கலைந்து) சென்று விட்டனர். அவனை விட்டு சென்றுவிட்டனர்.

(சுனன் அபூதாவூத், கிதாப் அல்கராஜ், ஹதீஸ் எண்: 3004)

இதேபோன்று மக்கத்து குரைஷிகள் அரேபிய கோத்திரங்களில் சுற்றுப்பயணம் செய்து முஸ்லிம்களுக்கு எதிராக அவர்களைத் தூண்டிவிட்டனர்.

ஆக, இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: பின்னர் அத்துடன் அவர்கள் நிறுத்திவிடவில்லை. மாறாக, அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தினர் முஸ்லிம்களுக்கு அடைக்கலம் கொடுப்பதிலிருந்து விலகுவதில்லை என்பதை கண்டபோதும், இஸ்லாம் மதீனாவில் வேரூன்றி விடுமோ

என்று அவர்கள் அச்சம் அடைந்தபோதும் அவர்கள் மற்ற அரேபிய கோத்திரங்களுக்கு சுற்றுப் பயணம் செய்து அவர்களை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டிவிடத் துவங்கிவிட்டனர். கஃபத்துல்லாஹ்வின் நிர்வாகிகளாக இருந்ததன் காரணத்தால் குரைஷியர்களுக்கு அனைத்து அரேபிய கோத்திரங்களிலும் ஒரு சிறப்பான மதிப்பச்சம் இருந்தது. எனவே குரைஷியர்களின் தூண்டுதலால் பல கோத்திரங்கள் முஸ்லிம்களின் உயிருக்கு பகைவர்களாகிவிட்டன. மேலும் மதீனாவின் நிலைமை எப்படி ஆகிவிட்டதென்றால், ஒருவகையில் அதன் நாலாப் புறமும் நெருப்பால் சூழப்பட்டிருப்பது போன்று ஆகிவிட்டது. (ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) எம். ஏ அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 301)

ஆக, ஓர் அறிவிப்பில் குறிப்பு கிடைக்கின்றது. அதாவது, ஹஸ்ரத் அபீ பின் கஃப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரின் ஸஹாபா பெருமக்கள் மதீனாவிற்கு வருகை தந்தபோதும் அன்ஸார் சகோதரர்கள் அவர்களுக்கு அடைக்கலம் தந்தபோதும் அனைத்து அரேபியர்களும் ஒரு வில்லைப் போன்று அதாவது அனைவரும் ஓர் உயிராக மாறி அவர்களுக்கு எதிராக திரண்டு எழுந்தனர். எனவே அந்த நாட்களில் முஸ்லிம்களின் நிலை இவ்வாறு இருந்தது. அதாவது, அவர்கள் இரவிலும் கூட ஆயுதங்களை வைத்துக் கொண்டு தூங்கி வந்தனர். மேலும் பகலிலும் ஆயுதங்களை வைத்துக் கொண்டே சுற்றி வந்தனர். மேலும், நமக்கு நிம்மதியான இரவை கழிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் அந்தக் காலம் வரையிலும்,மேலும் அல்லாஹ்வைத் தவிர்த்து வேறெவருடைய அச்சமும் இல்லாமல் இருக்கும் அந்தக் காலம் வரையிலும் நாம் உயிர் பிழைத்திருப்போமா? இல்லையா? என்று பாருங்கள்! என அவர்கள் ஒருவர் மற்றவரிடம் கூறிவந்தனர்.

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் நிலை இவ்வாறு இருந்தது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஆரம்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்தபோது, எதிரியின் தாக்குதலின் அபாயத்தால் அன்னார் (ஸல்) இரவுகளில் விழித்திருந்து வந்தார்கள். (அஸ்ஸுனன் அல்குப்ரா லின்நிஸாயி, கிதாபுல் மனாகிப் ஸஅத் இப்னு மாலிக், ஹதீஸ் எண்: 8217, தொகுதி 5, பக்கம் 61, தாருல் குதுபில் இல்மியா 1991)

இதே காலத்தைப் பற்றி திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

وَاذْكُرُوْٓا اِذْ اَنْتُمْ قَلِيْلٌ مُّسْتَضْعَفُوْنَ فِى الْاَرْضِ
تَخَافُوْنَ اَنْ يَّتَخَطَّفَكُمُ النَّاسُ فَاٰوٰىكُمْ
وَاَيَّدَكُمْ بِنَصْرِهٖ وَرَزَقَكُمْ مِّنَ الطَّيِّبٰتِ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ

முஸ்லிம்களே! நீங்கள் சிறுபான்மையினராக இருந்த அந்த நேரத்தை எண்ணிப் பாருங்கள். பூமியில் நீங்கள் மிகவும் பலவீனர்களாகக் கருதப்பட்டீர்கள். மக்கள் உங்களைப் பிடித்துச் சென்றுவிடுவார்களோ என்று நீங்கள் பயந்தீர்கள். அவ்வாறிருந்தும் நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு அவன் உங்களுக்கு (மதீனாவில்) அடைக்கலம் வழங்கினான். மேலும் தன்னுதவியினால் உங்களை உறுதிப்படுத்தினான். மேலும் தூய்மையானவற்றிலிருந்து உங்களுக்கு உணவு வழங்கினான். (9:27)

திருக்குர்ஆனில் குறிப்பிடப்-பட்டிருந்த வெளிப்புற அபாயங்கள் இவையாக இருந்தன. மதீனாவிற்குள்ளும் நிலைமை அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை.

உதாரணமாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு எழுதுகின்றார்கள்:

மதீனாவின் உட்புற நிலை இவ்வாறாக இருந்தது. அதாவது, அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் ஒரு பெரும் பகுதியினர் இன்னும் ஷிர்க்கில் நிலைபெற்றிருந்தார்கள். மேலும், அவர்கள் வெளிப்படையில் தங்களுடைய சகோதரர்களுடன் இருந்தனர் என்றபோதிலும், இதுபோன்ற நிலைமைகளில் ஓர் இணை வைப்பாளர் மீது என்ன நம்பிக்கை வைக்க முடியும்? பின்னர், இரண்டாவது இடத்தில் நயவஞ்சகர்கள் இருந்தனர். அவர்கள் வெளிப்படையில் இஸ்லாத்தை தழுவியிருந்தனர் என்றபோதிலும் திரைமறைவில் அவர்கள் இஸ்லாத்தின் எதிரிகளாக இருந்தனர். மேலும், மதீனாவிற்குள் அவர்களின் இருப்பு அபாயகரமான நிலைமைகளை உருவாக்கியிருந்தது. மூன்றாவது இடத்தில் யூதர்கள் இருந்தனர். அவர்களுடன் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டிருந்தபோதிலும் அந்த யூதர்களின் பார்வையில் உடன்படிக்கைக்கு எந்த விலையும் கிடையாது.

சுருக்கமாக, இவ்வாறு மதீனாவிற்குள்ளேயே முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு கண்ணி வெடிக் குவியலுக்கு குறைவில்லாத விஷயங்கள் இருந்தன. மேலும், அரேபிய கோத்திரங்களின் ஒரு சிறு பொறி அந்த வெடிகளைக் கொளுத்துவதற்கும், மதீனத்து முஸ்லிம்களை வெடித்துச் சிதறடிக்கச் செய்வதற்கும் அது போதுமானதாக இருந்தது. இதை விட அபாயகரமான நேரம் இஸ்லாத்தில் ஒருபோதும் வந்திராத இதுபோன்ற அபாயகரமான நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு, எந்த நிராகரிப்பாளர்கள் உமக்கு எதிராக வாளேந்திக் கொண்டு முழுக்க முழுக்க அநீதி மற்றும் அக்கிரமத்துடன் போர் மைதானத்தில் இறங்கியுள்ளனரோ மேலும் வாளேந்தி ஜிஹாத் செய்வதற்கு அறிவிப்பு செய்துள்ளனரோ அவர்களுக்கு எதிராக இனி நீரும் வாளை பயன்படுத்த வேண்டும்; (ஹஸ்ரத் ஸாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம்-302)

வாளேந்தி ஜிஹாத் செய்வது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஸஃபர் 12 ஆம் தேதி ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு, ஆங்கிலத் தேதியின்படி ஆகஸ்ட் 15 ஆம் தேதி கி.பி 623 ஆம் ஆண்டு, முதல் இறை வசனம் இறங்கியது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மதீனாவிற்கு வருகை தந்து சுமார் ஒரு வருட காலம் கழிந்திருந்தது. (ஹஸ்ரத் ஸாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம்-303)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் செய்த ஆய்வுக்கேற்ப இந்த வசனம் இறங்கிய காலம் இவ்வாறு அமைந்துள்ளது. ஏனெனில், இந்த சூராவைக் குறித்து இவ்வாறு வருகின்றது. அதாவது இதன் சில பகுதிகள் மக்காவில் இறங்கின. சில பகுதிகள் மதீனாவில் இறங்கின. ஆனால், எவ்வாறிருப்பினும் இந்த வசனம் இறங்கியது தொடர்பாக பல்வேறு அறிவிப்புகள் இருக்கின்றன. ஹிஜ்ரத் சந்தர்ப்பத்தில் இந்த வசனம் இறங்கியிருந்தது என்றும் அறிவிப்பு உள்ளது.

(தஃப்ஸீரே குர்தபீ, தஃப்ஸீர் சூரா அல்ஹஜ், பக்கம் -2110)

ஏனெனில், மதீனாவிற்கு வருகை தந்து விட்ட சில காலத்திற்குப் பிறகே மதீனாவின் சுற்றுவட்டாரப் பகுதியில் குரைஷிகளின் குழுவினரைத் தடுத்து நிறுத்துவதற்காகவும் ஏனைய பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காகவும் ஆயுதம் ஏந்திய படையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பத் துவங்கி இருந்தார்கள். எவ்வாறு இருப்பினும், ஹிஜ்ரத்தின் துவக்கத்தில் இந்த வசனம் இறங்கியது அல்லது ஓர் ஆண்டு கழிந்த பிறகு இறங்கியிருந்தது. ஆனால், மார்க்கத்திற்கு எதிராக போர் புரிபவர்களுக்கு பதிலடியாக போர் புரிவது தொடர்பாக (வழங்கப்பட்ட) இது முதல் அனுமதியாக இருந்தது. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அரசாங்கத்தின் கீழ் முன்னர் இருந்தார்களோ அந்த அரசாங்கத்திற்கு வெளியில் வந்திருந்தார்கள். ஏற்கனவே கூறப்பட்டது போன்று அரசாங்கத்தின் கீழ் இருந்து கொண்டு எந்தப் போரும் (அதற்கு எதிராக) செய்ய முடியாது. அன்னாரின் ஓர் அரசாங்கம் நிலைபெற்றிருந்தது. எந்த வசனத்தில் அல்லாஹ் அனுமதி நல்கியிருந்தானோ அது சூரா அல்ஹஜ்ஜின் வசனமாகும். இன்னும் கூறப்போனல், அவை இரண்டு வசனங்கள் ஆகும். அல்லாஹ் கூறுகின்றான்:

اُذِنَ لِلَّذِيْنَ يُقٰتَلُوْنَ بِاَنَّهُمْ ظُلِمُوْا ۚ وَاِنَّ اللّٰهَ عَلٰى نَصْرِهِمْ
لَقَدِيْرُ ۙ الَّذِيْنَ اُخْرِجُوْا مِنْ دِيَارِهِمْ بِغَيْرِ حَقٍّ اِلَّآ اَنْ يَّقُوْلُوْا
رَبُّنَا اللّٰهُ ۗ وَلَوْلَا دَفْعُ اللّٰهِ النَّاسَ بَعْضَهُمْ بِبَعْضٍ
لَّهُدِّمَتْ صَوَامِعُ وَبِيَعٌ وَّصَلَوٰتٌ وَّمَسٰجِدُ يُذْكَرُ فِيْهَا اسْمُ اللّٰهِ
كَثِيْرًا ۗ وَلَيَنْصُرَنَّ اللّٰهُ مَنْ يَّنْصُرُهٗ ۗ اِنَّ اللّٰهَ لَقَوِيٌّ عَزِيْزٌ

எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ அவர்களுக்குப் (போரிட) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

மேலும் நிச்சயமாக, அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான்.

எங்களின் இறைவன் அல்லாஹ் என்று கூறியதற்காக மட்டும் அநியாயமாக அவர்களின் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டவர்களுக்கும் (போரிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது). மேலும், அல்லாஹ் சில மனிதர்களுக்கு மற்றவர்களைக் கொண்டு பதிலடி கொடுக்க வைக்கவில்லையாயின் கோயில்களும், ஆலயங்களும், மடங்களும் அல்லாஹ்வின் பெயர் அதிகமாக நினைவுகூரப்படும் பள்ளிவாயில்களும் தரைமட்டமாக்கப்பட்டிருக்கும். மேலும் அல்லாஹ் அவனு (டைய மார்க்கத்து) க்கு உதவுபவர்களுக்கு நிச்சயமாக உதவுவான். நிச்சயமாக அல்லாஹ் சக்தி வாய்ந்தவனும், மிகைத்தோனும் ஆவான். (22: 40 -41)

அதாவது ஒவ்வொரு மார்க்கத்தின் வணக்க ஸ்தலத்தின் பெயரை குறிப்பிட்டு இங்கு அனைத்து மார்க்கத்திற்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜிஹாது கடமையாக்கப்பட்டப் பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிராகரிப்பாளர்களின் தீங்கிலிருந்து முஸ்லிம்களை பாதுகாப்பதற்காக துவக்கத்தில் நான்கு திட்டங்களை வகுத்தார்கள்.

ஆக, அந்தத் திட்டங்களைக் குறிப்பிட்டவாறும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: **முதலாவதாக,** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே பயணம் செய்து மதீனா சுற்று வட்டாரப் பகுதியின் அபாயத்திலிருந்து பாதுகாப்பாக ஆகிவிடும் பொருட்டு அக்கப்பக்கத்திலிருந்த கோத்திரங்களுடன் பரஸ்பர அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான உடன்படிக்கைகளை செய்யத் துவங்கிவிட்டார்கள். இந்த விவகாரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பாக, குரைஷிகளின் சிரியாவிற்கு செல்லும் வழிப்பாதைக்கு அருகில் வசித்து வந்த கோத்திரங்களை கருத்தில் கொண்டார்கள். ஏனெனில், இந்த கோத்திரங்களிடமிருந்தே மக்கத்து குரைஷிகள் முஸ்லிம்களுக்கு எதிராக உதவியை பெற முடிந்திருந்தது. மேலும், அந்த கோத்திரங்களின் பகைமை முஸ்லிம்களுக்கு மிகவும் மோசமான அபாயங்களை உருவாக்கக் கூடியதாக இருந்தது.

**இரண்டாவதாக,** குரைஷிகள் மற்றும் அவர்களது கூட்டாளிகளின் நடவடிக்கைகளைக் குறித்து தமக்கு தகவல் கிடைத்துக் கொண்டிருப்பதற்கு ஏதுவாகவும், முஸ்லிம்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர் என்ற எண்ணம் குரைஷிகளுக்கு இருக்கும் வகையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவின் பல்வேறு இடங்களுக்கு தகவல் அறியும் சிறு, சிறு குழுக்களை அனுப்பி வைக்கத் துவங்கிவிட்டார்கள். மேலும் இதன் மூலம் மதீனா திடீர் தாக்குதல்களின் அபாயங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்கும் என்பதாலும் அவ்வாறு செய்தார்கள்.

**மூன்றாவது,** இந்த குழுக்களை அனுப்புவதற்கு இந்த ஒரு நுட்பமான காரணமும் இருந்தது. அதாவது, இதன் மூலம் மக்கா மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் உள்ள பலவீனமான மற்றும் ஏழை முஸ்லிம்களுக்கு மதீனாவின் முஸ்லிம்களை வந்து சந்திப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துவிட வேண்டும் என்பதும் ஒரு காரணமாக இருந்தது. இன்னும் மக்காவின் பகுதிகளில் பல மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தனர் என்றால், அவர்கள் உள்ளத்தால் முஸ்லிம்களாகியிருந்தனர். ஆனால், குரைஷிகளின் அநீதிகளின் காரணமாக தாங்கள் இஸ்லாத்தைத் தழுவியதை வெளிப்படுத்த முடியாமல் இருந்தனர். மேலும், அவர்களது ஏழ்மை மற்றும் பலவீனத்தின் காரணமாக அவர்களிடம் ஹிஜ்ரத் செய்வதற்கான வலிமை இல்லாமல் இருந்தது. ஏனெனில், குரைஷிகள் அப்படிப்பட்ட மக்களை ஹிஜ்ரத் செய்வதிலிருந்து பலவந்தமாக தடுத்து வந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வகுத்த **நான்காவது திட்டம்** இதுவாக இருந்தது. அதாவது, மக்காவிலிருந்து சிரியாவிற்கு சென்று வரும்போது மதீனாவிற்கு அருகில் கடந்து சென்று கொண்டிருந்த குரைஷிகளின் அந்த வணிகக் குழுக்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடுத்து நிறுத்த துவங்கியிருந்தார்கள்.

இந்தக் வணிகக் குழுக்கள் எங்கெங்கெல்லாம் கடந்து சென்று வந்ததோ அங்கு முஸ்லிம்களுக்கு எதிராக பகைமையின் நெருப்பை மூட்டிக் கொண்டிருந்தன. மதீனாவின் சுற்றுவட்டாரத்தில் இஸ்லாத்தின் மீதான பகைமையின் விதையை விதைப்பது முஸ்லிம்களுக்கு மிகவும் அபாயகரமானதாக இருந்தது என்பது வெளிப்படையாகும்.

அடுத்து, இந்த விஷயம் அதாவது, இந்த வணிகக் குழு எப்போதும் ஆயுதம் ஏந்தியதாக இருந்தது. இப்படிப்பட்ட வணிகக் குழுக்கள் மதீனாவிற்கு இந்த அளவிற்கு அருகில் கடந்து செல்வது நிச்சயமாக அபாயகரமானதாகும் என்பதை ஒவ்வொரு நபராலும் புரிந்து கொள்ள முடியும்.

பின்னர் இந்த விஷயமும் இருக்கின்றது. அதாவது, குரைஷிகளின் பெரும்பாலான வருமானம் வியாபாரத்தை அடிப்படையாக கொண்டிருந்தது. மேலும், குரைஷியர்களின் உட்புற நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்கும், அவர்களை அவர்களின் அநியாயமான நடவடிக்கைகளிலிருந்து தடுத்து நிறுத்துவதற்கும், சமாதானம் செய்து கொள்ளும்படி நிர்பந்தம் செய்வதற்கும் அவர்களின் வியாபார வழிப்பாதையை அடைத்துவிடுவது எல்லாவற்றையும் விட மிகவும் நம்பிக்கைக்குரிய மற்றும் விரைவாக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வழிமுறையாக இருந்தது.

எனவே வரலாறு இந்த விஷயத்திற்கு சாட்சியாக உள்ளது. அதாவது எந்த விஷயங்கள் இறுதியில் குரைஷிகளை சமாதானத்தின் பக்கம் இறங்கி வரும்படி நிர்பந்தத்திற்கு ஆளாக்கியதோ அவற்றில் அவர்களின் வணிகக் குழுக்கள் தடுத்து நிறுத்தப்படுதல் எனும் திட்டத்திற்கு மிக முக்கியப் பங்கு இருந்தது. எனவே இது ஒரு மிகவும் அறிவுப்பூர்வமான திட்டமாக இருந்தது. அது தனக்குரிய நேரத்தில் வெற்றியின் கனியைக் கொடுத்தது.

அடுத்து, குரைஷிகளின் இந்த வணிகக் குழுக்களால் கிடைத்து வந்த லாபம் பெரும்பாலும் இஸ்லாத்தை அழிக்கின்ற முயற்சியில்தான் செலவிடப்பட்டது. இன்னும் கூறப்போனால், சில வணிகக் குழுக்கள் குறிப்பாக இந்த நோக்கத்திற்காகவே அனுப்பப்பட்டன. அதாவது அதன் அனைத்து லாபமும் முஸ்லிம்களுக்கு எதிராக பயன்படுத்தப்படும் என்பதற்காகவே அவை அனுப்பப்பட்டன. அதாவது அதன் மூலம் நடைபெற்று வந்த வணிகம் என்பது முஸ்லிம்களுக்கு எதிராக போர்தொடுப்பதற்கு பயன்பட வேண்டும் என்பதற்காக அமைந்திருந்தது. அந்த நிலையில், இந்த வணிகக் குழுக்களை தடுத்து நிறுத்துவது சுயமே ஒரு முற்றிலும் ஆகுமான நோக்கமாக இருந்தது என்பதை எல்லா நபராலும் புரிந்து கொள்ள முடியும். (ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) எம். ஏ அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம்- 323 -324)

எவ்வாறு இருப்பினும், இந்தத் தொடர் தொடரும். எஞ்சியவை எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும். இன்ஷாஅல்லாஹ்.

தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைக்க விரும்புகின்றேன். அவர்களின் ஜனாஸா தொழுகையும்


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

நிறைவேற்றப்படும். அவர்களில் ஒருவரின் ஜனாஸா இங்கு நேரில் வரப்பட்டுள்ளது. அது மதிப்பிற்குரிய கவாஜா முனீருத்தீன் கமர் ஸாஹிப் அவர்களுடையதாகும். மற்றவை காயிப் ஜனாஸாக்கள் ஆகும். கவாஜா முனீருத்தீன் கமர் ஸாஹிப் அவர்கள் இங்கே யூ.கேவில் தான் வசித்து வந்தார்கள். மே 27 ஆம் தேதி 86-ம் வயதில் இறை நியதிக்கேற்ப அன்னார் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியான ஹஸ்ரத் மியான் கைருத்தீன் ஸாஹிப் சீக்வானி ஸாஹிப் (ரலி) அவர்களுடைய மகன் வழிப் பேரனாக இருந்தார்கள். அன்னாரின் தந்தை மவ்லானா கமருத்தீன் ஸாஹிப் அவர்களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சிறிய வயதில் பார்த்துள்ளார்கள். மிகவும் குழந்தைப் பருவமாக இருந்தது. எவ்வாறு இருப்பினும், அன்னாரின் தந்தையார் மவ்லவி கமருத்தீன் ஸாஹிப் அவர்கள் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் முதலாவது தேசிய சத்ர் ஆக இருந்தார்கள். இந்தியா, பாகிஸ்தான் பிரிவினை நிகழ்ந்தபோது இவர்கள் பாகிஸ்தானிற்கு இடம் பெயர்ந்து விட்டார்கள். பின்னர், கவாஜா முனீருத்தீன் ஸாஹிப் சிலகாலத்திற்கு தன்ஸானியா ஆஃப்ரிக்காவிற்கு சென்றுவிட்டார்கள். ரப்வாவிலும் அன்னாருக்கு பல்வேறு ரீதியில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. பின்னர் 1966 ஆம் ஆண்டில் தமது குடும்பத்துடன் யூ.கேவிற்கு வந்து விட்டார்கள். மேலும், இங்கு மஸ்ஜித் ஃபஸ்ல் பள்ளிவாசலுக்கு அருகில் அவர்களின் வீடு இருந்தது. பழைய மக்கள் அனைவரும் அன்னாரை அறிவார்கள். நான்காவது கிலாஃபத்தின் காலகட்டத்தில் அன்னாருக்கு மஸ்ஜித் ஃபஸ்ல் பள்ளிவாசலில் ஜுமுஆ பாங்கு கொடுப்பதற்கும் நற்பேறு கிடைத்திருந்தது. மர்ஹூம், மஸ்ஜித் ஃபஸ்ல் லண்டன் ஜமாஅத்தின் தலைவராகவும் தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்றிருந்தார்கள். 1995 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுவிட்ட பிறகு வாழ்க்கையை அர்ப்பணித்துவிட்டார்கள். மேலும், கடந்த முப்பது ஆண்டுகளாக தன்னார்வத் தொண்டராக முதலில் இங்கு வகாலத் தப்ஷீரிலும் பின்னர் யூ.கே பிரைவேட் செகரட்டரி அலுவலகத்திலும் தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்று வந்தார்கள். மரணத்திற்கு ஒருநாள் முன்பு வரையிலும் லுஹர் தொழுகைக்கு முன்பு வரை அலுவலகத்தில் பணி செய்து கொண்டிருந்தார்கள். பின்னர் தொழுது விட்டு வீட்டிற்கு சென்றார்கள். ஐவேளை தொழுகைகளை பேணக்கூடியவராகவும், மிகவும் அமைதியான இயல்பு படைத்தவராகவும், அனுதாபம் கொண்டவராகவும், மகிழ்ச்சியுடன் பழகக் கூடியவராகவும், நல்ல, தூய மற்றும் நன்றியுணர்வு மிக்க நபராகவும் மர்ஹூம் இருந்தார்கள். மர்ஹூம் வஸிய்யத் செய்தவராகவும் இருந்தார்கள். மனைவி மட்டுமின்றி இரண்டு மகன்களும், இரண்டு மகள்களும் உள்ளனர். மேலும், ஏராளமான மகன் வழிப் பேரன்களும், பேத்திகளும், பின்னர் மகள் வழிப்பேரன், பேத்திகளும் உள்ளனர். அமீர் ஸாஹிப் யூ.கே அவர்களின் மாமாவாகவும் அன்னார் இருந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. நேரில் கொண்டுவரப்பட்டுள்ள இந்த ஜனாஸாவிற்கு இன்ஷா அல்லாஹ் தொழுகை நடத்தப்படும்.

மற்ற ஜனாஸாக்கள் காயிப் ஜனாஸாக்கள் ஆகும். அவற்றில் ஒன்று, ஸாஹிப்ஸாதா மிர்ஸா முபஷ்ஷிர் அஹ்மது ஸாஹிப் அவர்களுடையது ஆகும். அன்னார் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மகன் வழிப் பேரனும், டாக்டர் மிர்ஸா முனவ்வர் அஹ்மத் ஸாஹிப் மற்றும் மஹ்மூதா பேகம் ஸாஹிபா ஆகியோரின் மகனும் ஆவார்கள். மேலும் ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் ஸாஹிபா (ரலி) அவர்களின் மகள் வழிப் பேரர் ஆவார்கள். அன்னார் 79வது வயதில் கடந்த நாட்களில் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளினால் அன்னார் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். ரப்வாவிலிருந்து அன்னார் துவக்கக் கல்வியைப் பெற்றிருந்தார்கள். பின்னர் கிங்க் எட்வர்ட் மெடிக்கல் காலேஜ் லாஹூரிலிருந்து MBBS தேர்ச்சி பெற்றார்கள். பின்னர் சில காலம் ரப்வாவின் மருத்துவமனையில் பணி செய்தார்கள். பின்னர் கல்வி பயில்வதற்காக இங்கு யூ.கேவிற்கு வந்து விட்டார்கள். மேலும், ராயல் காலேஜ் ஆஃப் சர்ஜன்ஸ்ஸில் அன்னார் 1970 ஆண்டில் போஸ்ட் கிராஜுவேஷன் செய்தார்கள். மேலும், FRCS பயின்றார்கள். பின்னர் திரும்பி வந்துவிட்டார்கள். மேலும் வக்ஃப் செய்திருந்தார்கள். எனவே அங்கு ஃபஸ்ல் உமர் மருத்துவமனையில் தொண்டுகள் ஆற்றி வந்தார்கள். சுமார் 50 வருடங்கள் ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் தொண்டாற்றுவதற்கு அன்னாருக்கு நற்பேறு கிடைத்தது. அங்கு நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் பணி செய்யக் கூடிய வாழ்க்கையை அர்ப்பணித்த மருத்துவர்களில் மிகவும் அதிக காலம் அன்னார் தொண்டு செய்துள்ளார்கள். அநேகமாக இதை விட அதிக காலம் டாக்டர் மிர்ஸா முனவ்வர் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடையதாகவும் இருக்கக் கூடும். ஆனால், எவ்வாறு இருப்பினும் அன்னாருக்கு ஐம்பது வருடங்கள் தொண்டாற்றுவதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. 1983 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அன்னாரை வக்ஃபே ஜதீத் போர்ட்டின் உறுப்பினராகவும் நியமனம் செய்தார்கள். மேலும், மரணம் வரை வக்ஃபே ஜதீத் போர்டின் உறுப்பினராக இருந்தார்கள்.

அன்னாரின் துணைவியார் எழுதுகின்றார்கள்: உறவுகளை மிகவும் பேணக் கூடியவராக இருந்தார்கள். மிகவும் கருத்தில் கொண்டார்கள். தாய், தந்தை, சகோதரி, சகோதரர்கள், அன்பிற்குரிய உறவினர்கள், என்னுடைய தாய், தந்தை, மற்றும் உறவினர்கள் என அனைவருடனும் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். மேலும், எந்தவொரு மகிழ்ச்சி அல்லது துக்கத்தின் சந்தர்ப்பத்திலும் அவர்களில் ஒருவரை அன்னார் விட்டுவிட்டதாக நினைவு இல்லை. மேலும், தம் மீது பொறுப்பை சுமத்திக் கொள்வார்கள். ஒருபோதும் உறவுகளை பேணுவதில் சோம்பலை வெளிப்படுத்தியதில்லை. மேலும் குடும்பத்தில் எத்தனை பெரியவர்கள் இருந்தனரோ அவர்களுக்கு சிகிச்சை செய்வதற்கும் அன்னாருக்கு நற்பேறு கிடைத்தது. நோயாளிகளின் நலம் விசாரிப்பதற்காக அன்னார் வீடுகளுக்கு சென்று வந்தார்கள். அதே போன்று தேவையுடையவர்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்து வந்தார்கள். எந்த ஒரு யாசிப்பவரையும் அன்னார் ஒருபோதும் நிராகரித்ததில்லை. ஏராளமான பெண் பிள்ளைகளை அன்னார் கல்வி கற்கச் செய்தார்கள். மேலும் திருமணம் வரை அவர்களின் செலவினங்களை வழங்கி வந்தார்கள். சில பெண்பிள்ளைகளே எனக்கும் எழுதியுள்ளனர். இவர்கள் அன்னாரின் வீட்டிலும் தங்கியிருந்தனர். மேலும் இவர்களை அன்னார் தமது (சொந்தப்) பிள்ளைகளைப் போன்று பராமரித்துள்ளார்கள். மேலும், அதன் பிறகு அவர்களுக்கு திருமணம் செய்து வைத்துள்ளார்கள். நோயாளிகளின் ஃபீஸ் போன்றவற்றை கூட மறுத்து விடுவார்கள். பல மக்கள் இது தொடர்பாகவும் எனக்கு எழுதியுள்ளனர். இன்னும்கூறப்போனால், அன்னார் தமது தரப்பிலிருந்து மருந்துகளும், பணமும் கூட கொடுத்து வந்தார்கள். கலீஃபாக்களுடன் மிகவும் ஆழமான தொடர்பு இருந்தது. இந்த ஒரு விஷயமும் இருந்தது. அதாவது, இது வரை எத்தனை கலீஃபாக்கள் வந்துள்ளனரோ அவர்களுடன் உறவினருக்கான தொடர்பும் இருந்தது. மற்றொன்று கண்ணியம் மற்றும் மரியாதையின் தொடர்பையும் மிக அதிகமாக அன்னார் கொண்டிருந்தார்கள். மேலும், (தமது) பிள்ளைகளுக்கும் இதனையே கூறிக் கொண்டு வந்தார்கள். மேலும் சுயமே அமல் செய்தும் காட்டினார்கள். இதற்கு முன்பும் நான் நாஸிர் ஆஃலாவாக இருந்தபோது அன்னார் மிக அதிகமான கண்ணியம் மற்றும் மரியாதையின் நடத்தையை கொண்டிருந்தார்கள்.

அன்னாரின் துணைவியார் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் துணைவியார் அவர்கள் இறுதியாக நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். அப்போது டாக்டர் முபஷ்ஷிரை உடனடியாக அனுப்பி வையுங்கள் என்று ஹஸ்ரத் நான்காவது

கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தொலைபேசியில் கூறினார்கள். எனவே இந்த செய்தியை செவியுற்று அன்னார் இரவோடு இரவாக புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள். மேலும் அன்னாரின் மரணம் வரை பின்னர் அங்கேயே இருந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் மதிப்பிற்குரிய ஹஸ்ரத் ஆஸிஃபா பேகம் ஸாஹிபா அவர்களின் மரணத்தின்போது இவ்வாறு கூறியிருந்தார்கள்: முபஷ்ஷிர் என்னை லிஃப்ட்டுக்கு அருகில் அழைத்துச் செல்ல வந்தார். அப்போது நான் முபஷ்ஷிரைக் கண்ட உடனேயே மனைவி இறந்துவிட்டார் என்பதை புரிந்து கொண்டேன். ஏனெனில், நான் அறிந்திருந்தேன். அன்னாரின் உடல்நலம் பாதிப்படைந்திருந்தால் பின்னர் அன்னாரை முபஷ்ஷிர் ஒருபோதும் தனித்து விட்டு விட்டு வந்திருக்க மாட்டார்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தபோதும் அன்னார் சிகிச்சைக்காக யூ.கே வந்து சென்றார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபா (ரஹி) அவர்களும் தாம் நோய்வாய்ப்பட்டிருந்த-போது அன்னார் ஆற்றிய தொண்டுகளை ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

அன்னாரின் துணைவியார் எழுதுகின்றார்கள்: ஒருமுறை அன்னாருக்கு எதிராக ஒரு பொய் புகார் செய்யப்பட்டது. அதனை விசாரிப்பதற்காக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தநேரத்திலும் அன்னார் காலத்தின் கலீஃபா மற்றும் அமைப்பிற்கு கண்ணியம் வழங்கினார்கள். மேலும், எந்த ஆகுமற்ற கூற்று அல்லது நடத்தையையும் வெளிப்படுத்தவில்லை. மேலும் கமிட்டி, பின்னர் முழுமையாக அனைத்தையும் விசாரித்தது. மேலும், அன்னாரை அந்த விவகாரத்திலிருந்து குற்றமற்றவராக விடுதலை செய்தது.

அன்னாரின் மகன் எழுதியுள்ளார்: சீனியூட் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியிலிருந்து சில எதிரிகள் கூட மறைமுகமாக வீட்டிற்கு வந்து சிகிச்சை பெற்று வந்தார்கள். மேலும், அன்னாரின் ஏராளமான அஹ்மதி அல்லாத நோயாளிகள் இருந்தனர். நானும் அறிவேன். அந்தப் பகுதியின் எண்ணற்ற மக்களுக்கு அன்னார் சிகிச்சை செய்துள்ளார்கள். மேலும் அதன் காரணமாக ரப்வாவும், மருத்துவமனையும் மிகவும் அறிமுகமாகியிருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது இறுதி நோயின்போது மருந்து அருந்துவதற்காக கரண்டி ஒன்றை பயன்படுத்தி வந்தார்கள். அந்தக் கரண்டி ஒரு சிறிய தேனீர் கரண்டியாக இருந்தது. ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உம்மே நாஸிர் அவர்களிடம், எந்த மகன் மருத்துவர் ஆகுவாரோ அவருக்கு அதனை கொடுத்து விடவும் என்று கூறியவாறு அதனை கொடுத்துவிட்டார்கள். எனவே அந்தக் கரண்டி அன்னாரின் தந்தை டாக்டர் மிர்ஸா முனவ்வர் அஹ்மத் ஸாஹிப் அவர்களுக்கு கிடைத்தது. அதன் பிறகு அந்தக் கரண்டி மர்ஹூமிடம் இருந்தது. சிலமுறை அருளுக்காக டாக்டர் முபஷ்ஷிர் ஸாஹிப் தமது நோயாளிகளுக்கும் அதிலிருந்து மருந்தை அருந்தச் செய்து வந்தார்கள்.

அன்னாரின் இரங்கலுக்கு வரக்கூடியவர்களில் எல்லாத் தரப்பு மக்களும் இருந்தனர். ஆனால், ஒரு பெரும் பகுதியினர் ஏழை வர்க்கத்தைச் சேர்ந்த மக்களாக இருந்தனர். மேலும், மியான் ஸாஹிப் எங்களுக்கு நன்மை புரியக் கூடியவராக இருந்தார்கள் என்று இந்த விஷயத்தை அவர்கள் மீண்டும், மீண்டும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். ஒருவருக்கு அன்னார் சிகிச்சை செய்திருந்தார்கள் என்றால் மற்றொருவரை வேறு ஒரு வழிமுறையில் கருத்தில் கொண்டிருந்தார்கள். அந்தப் பகுதியைச் சேர்ந்த ஏராளமான நிலவுடைமையாளர்கள் மற்றும் அவர்களின் பெண்கள், அவர்களின் சகோதரிகள் சிகிச்சைக்காக வந்தார்கள். மேலும், அன்னார் எவ்வாறு தங்களை கருத்தில் கொண்டார்கள் என்று அந்த நிலவுடைமையாளர்கள் நேரில் வந்து வெளிப்படுத்தினார்கள். எங்களது தலையின் மேல் இருந்து தந்தையின் பரிவு மறைந்து விட்டது என்று இந்த அனைத்து அஹ்மதி அல்லாதவர்களும் கூட வந்து அழுது கொண்டிருந்தனர்.

அடுத்து, மருத்துவமனையின் ஊழியர்கள் இருக்கின்றனர். எங்களது மருத்துவமனை அனாதையாகி விட்டது என்று அவர்களில் பெரும்பான்மையினர் எனக்கு கடிதம் எழுதியுள்ளனர். அனைவரும் மிகவும் துக்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் வருத்தத்தை வெளிப்படுத்தியுள்ளனர். எவ்வாறு இருப்பினும், அனைவருடனும் நட்பு பாராட்டினார்கள். ஏழைகளைக் கருத்தில் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜனாஸா சென்று கொண்டிருக்கும்போது கூறினார்கள்: மரணமடைந்தவர் புகழ்ந்துரைக்கப்பட்டால் பின்னர் அவருக்கு சொர்க்கம் கடமையாகிவிட்டது. (ஸஹீஹ் புகாரி, ஹதீஸ் எண்: 1367)

டாக்டர் மிர்ஸா சுல்தான் அஹ்மத் ஸாஹிப் கூறுகின்றார்கள்: எங்களது அறிவின்படி ஜமாஅத்தில் மிக அதிகமாக சேவை செய்யக் கூடிய மருத்துவருக்கான கண்ணியம் அன்னாருக்கு கிடைத்துள்ளது.

நான் முன்னரும் அதை எடுத்துரைத்துவிட்டேன். அன்னார் எழுதுகின்றார்கள்: எந்தக் காலத்தில் அன்னார் பணியை தொடங்கினார்களோ அந்தக் காலத்தில் எந்த ஒரு உதவியாளரும், கம்பவுண்டர் போன்றவரோ அல்லது ஹெல்பர் போன்றவர்கள் எல்லாம் இருக்கவில்லை. தாமே தாழிட வேண்டியிருந்தது. திறக்க வேண்டியிருந்தது. நோயாளிகளையும் அழைக்க நேரிட்டு வந்தது. மற்ற பணிகளையும் தாமே செய்ய வேண்டியது இருந்தது. தனியாகவே ஆப்ரேஷன் தியேட்டரை மேனேஜ் செய்ய நேரிட்டு வந்தது. அனஸ்தீஷியா (மயக்க மருந்து) கொடுக்கக் கூடியவர் எவரும் இருக்கவில்லை. அந்தப் பணியையும் அன்னார் சுயமே செய்து வந்தார்கள். மேலும், பின்னர் மெது மெதுவாக அன்னார் பணியாளர்களுக்கு பயிற்சி கொடுத்தார்கள். மேலும், அதன் பிறகு மருத்துமனை அதிகம் பிரபல்யம் அடைந்துவிட்டது. மேலும் கூறுகின்றார்கள்: இன்ஃபெக்ஷனின் சதவிகிதமும் மற்ற அனைத்து தனியார் மருத்துவமனையை விடவும் குறைவாக இருந்தது. பெரும்பாலான நோயாளிகள் வெற்றிகரமான சிகிச்சைக்குப் பிறகு மருத்துவ மனையிலிருந்து சென்றார்கள். எவ்வாறு இருப்பினும், நோயாளிகளுடனான அன்னாரின் நடைமுறையைக் நான் கண்டுள்ளேன். மேலும் அஹ்மதி அல்லாத நோயாளிகளையும் கூட நான் தனிப்பட்ட முறையில் அறிவேன். அவர்கள் மர்ஹூமிற்கு மிகுந்த கண்ணியம் வழங்கி வந்தார்கள்.

அரசாங்க மருத்துவமனையில் மருத்துவராக இருக்கின்ற டாக்டர் முனீர் முபஷ்ஷிர் ஸாஹிப் கூறுகின்றார்கள்: நான் டாக்டர் ஸாஹிப் அவர்களுடைய மருத்துவ தொண்டுகளின் ஒரு பரந்தத் தொடரைக் கண்டுள்ளேன். அந்தத் தொடர் ரப்வா வாசிகளை மட்டுமல்லாது இன்னும் கூறப்போனல் சுற்றுவட்டாரத்திலுள்ள அனைத்துப் பகுதி மக்களையும் சூழ்ந்துள்ளது. கூறுகின்றார்கள்: எனது அனைத்து வேலையும் ரப்வாவின் சுற்றுப்புறப் பகுதியிலேயே இருந்தது.

இவர்கள் அரசாங்க மருத்துவமனைகளில், ரப்வாவின் சின்னச் சின்ன மருத்துவமனைகளில் பணியமர்த்தப்பட்டிருந்தார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: அநேகமாக எல்லா கிராமங்களிலிருந்தும், எல்லா நகரங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் அன்னாரின் மீது பற்றுக் கொண்டவர்களாக இருந்தனர். மேலும் நான் கூறியதுபோன்று இதன் காரணமாகவே எண்ணற்ற ஜமாஅத்தைச் சாராத மக்கள் அன்னாரின் மரணத்தையொட்டி இரங்கல் தெரிவிக்க வந்தனர்.

டாக்டர் நூரி ஸாஹிப் எழுதினார்கள்: ரப்வாவில் தனியாக வசிக்கக் கூடிய வயதான நோயாளி ஒருவர் டாக்டர் முபஷ்ஷிர் ஸாஹிப் அவர்களின் நிழற்படத்தை தனது அறையில் மாட்டி வைத்திருந்தார். டாக்டர் நூரி ஸாஹிப் அவர்கள் அவரைப் பார்ப்பதற்காக சென்றபோது, பெரும் புகழ்ச்சியுடனும், மரியாதையுடனும் அந்த நோயாளி கூறினார்: டாக்டர் முபஷ்ஷிர் ஸாஹிப் எனது வீட்டிற்கு வருவார்கள். மேலும், எனது ஆரோக்கியத்தையும், உடல் நலத்தையும் விசாரித்து வந்தார்கள். அல்லாஹ் அன்னாரை நலமுடன் வைப்பானாக.

இது அன்னார் உயிருடன் இருந்த காலத்தில் நிகழ்ந்த விஷயமாகும். மர்ஹூமுடைய சிறப்பான தொண்டுகள் மற்றும் நோயாளிகளின் உணர்வுகளை

உள்ளடக்கிய கடிதங்கள் எவ்வளவு உள்ளன என்றால், அதனை எடுத்துரைப்பது எனக்கு சாத்தியமற்ற விஷயமாகும். நான் முன்னரே கூறியதுபோன்று கிலாஃபத்துடனும் அசாதாரண நன்றியுணர்வு மிக்க தொடர்பு இருந்தது. அல்லாஹ் அன்னாருடன் எல்லையற்ற பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் தனது அன்பர்களுக்கு அருகில் இடமளிப்பானாக.

மூன்றாவது ஜனாஸா, இது இரண்டாவது காயிப் ஜனாஸா ஆகும். இஸ்லாமாபாத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஸய்யத் மஹ்மூத் அஹ்மத் பாஸித் ஸாஹிப் அவர்களுடைய துணைவியார் மதிப்பிற்குரிய ஸய்யிதா அமத்துல் பாஸித் ஸாஹிபா அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

டாக்டர் ஸய்யத் அப்துஸ் ஸத்தார் ஷாஹ் ஸாஹிப் அவர்களின் மகன் வழிப் பேத்தி ஆவார்கள். மேலும் மதிப்பிற்குரிய அப்துர் ரஸ்ஸாக் ஸாஹிப் அவர்களின் மகள் ஆவார்கள். ஹஸ்ரத் உம்மே தாஹிர் (ரலி) அவர்களின் அண்ணன் மகள் ஆவார்கள். மர்ஹூமாவின் தந்தை அப்துர் ரஸ்ஸாக் ஷாஹ் ஸாஹிப் அவர்கள் முதலாவது ஜர்மன் அஹ்மதி பெண்மணியாகிய ஷாஹ் ஸாஹிபா அவர்களுடன் திருமணம் செய்தார்கள். அன்னாரின் முந்தைய பெயர் கேத்தரீன் ஒபரைன் ஆகும். இந்த திருமணம் 1945 ஆம் ஆண்டில் நைரோபி, கென்யாவில் நடைபெற்றது. பின்னர் அன்னாரின் இந்த தாயார் பாகிஸ்தானிற்கு வந்துவிட்டார்கள். பாகிஸ்தானில் ஷாஹ் ஸாஹிப் சிந்துப் பகுதியில் பணியமர்த்தப்பட்டிருந்தார்கள். மேலும் அங்கு சிறிய கிராமத்தில் அன்னார் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண்மணியாக இருந்தபோதிலும் பெரும் தியாகத்துடன் வாழ்வை கழித்தார்கள். மேலும் அவர்களின் பிள்ளைகளும் பெரும் தியாகம் செய்யக்கூடியவர்களாக இருந்தனர். அவர்களில் ஒருவர் தான் இந்த அமத்துல் பாஸித் ஸாஹிபா ஆவார்கள்.

அன்னாரின் கணவர் ஸய்யத் மஹ்மூத் ஷாஹ் ஸாஹிப் கூறுகின்றார்கள்: தொழுகைகளைப் பேணக்கூடியவர் மற்றும் குறிப்பாக மிகவும் முறையாக தஹஜ்ஜுத் தொழக்கூடிய பெண்மணியாக இருந்தார்கள். மேலும், குழந்தைப் பருவம் முதலே தஹஜ்ஜுத் தொழுகையை தமது தந்தையுடன் தொழுது வந்தார்கள். அன்னார் மார்க்க அடையாளங்களைப் பேணக்கூடிய மற்றும் மார்க்கப் பற்றுள்ள பெண்மணியாகவும் இருந்தார்கள். எப்போதும் ஏழைகள் மற்றும் ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்து வந்தார்கள். பர்தாவை மிகவும் கடுமையாக பேணக் கூடியவராக இருந்தார்கள். மர்ஹூமா வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அன்னார் பின்விட்டுச் சென்ற உறவினர்களில் கணவர் மட்டுமின்றி ஒரு மகளும், இரு மகன்களும் இருக்கின்றனர்.

அன்னாரின் மகன் ஸய்யத் பஷீர் அஹ்மத் ஸாஹிப் அவர்களோ இங்குதான் வசிக்கின்றார்கள். மேலும் மற்றொரு மகன் ஸய்யத் ஷாஹித் அஹ்மத் ஆவார்கள். மகள் அமெரிக்காவில் இருக்கின்றார்கள். அமெரிக்காவின் டாக்டர் ஆமிர் மலிக் ஸாஹிப் அவர்களின் மனைவியான அன்னாரின் மகள் மஜீதா மலிக் ஸாஹிபா கூறுகின்றார்கள்: தாயார் எல்லாருடைய அன்பையும் பெற்றவராகவும், மிகவும் மகிழ்ச்சிகரமான இயல்புக்கு சொந்தக்காரராகவும் இருந்தார்கள். அன்னாரை சந்திப்பவர் அனைவரும் அன்னாரால் ஈர்க்கப்பட்டு விடுவர். கிலாஃபத்துடன் இதயப்பூர்வமான அன்பு கொண்டிருந்தார்கள். மிகவும் தூய இயல்பு படைத்தவராகவும், அழகிய நற்பண்புகளுக்கு சொந்தக்காரராகவும் இருந்தார்கள். தமது துன்பங்களை ஒருபோதும் விரிவாக எடுத்துரைக்க மாட்டார்கள். ஏழைகளை பராமரிக்கக் கூடியவரும், தான தருமங்களில் முன்னேறிய பெண்மணியாகவும் இருந்தார்கள். பெண் பிள்ளைகளின் திருமணத்திற்காக உதவி, ஏழைகளின் குடும்பங்களில் ரேஷன் பொருட்களை கொடுப்பது, அனாதைகளின் கல்விச் செலவு, ஏழைகளுக்கு உணவளிப்பது என சுருக்கமாக தமது நேரத்தை அல்லாஹ்வின் அடியார்களின் உதவிக்காக செலவிட்டு வந்தார்கள். அது துஆவின் வடிவிலும் இருக்கும் அல்லது ஸதகாவின் வடிவிலும் இருக்கும். அதிகமாக இறைவனின் கூற்றுகளையும், இறை உதவிகளுக்கான விஷயங்களை பேசுவதையும் விரும்பி வந்தார்கள். மேலும், இறைவனின் மீது நேசம் கொண்ட மக்களுடனேயே நட்பு பாராட்டி வந்தார்கள். அல்லாஹ்வும் அன்னாருடன் ஒரு சிறப்பான நடைமுறையை கொண்டிருந்தான். அன்னாரின் துஆக்களை அல்லாஹ் ஒப்புக் கொண்டும் வந்தான். மேலும் ஏராளமான விஷயங்களில் ஏராளமான துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கு முன்னரே அன்னாருக்கு தகவல் வழங்கியும் விடுவான். கடுமையான நோயின்போதும் அன்னார் தொழுகையை விட்டுவிடவில்லை. தொழுகைக்கான நேரம் கடந்து விடக் கூடாது என்று எப்போதும் பார்வை கடிகாரத்தின் மீதே இருந்து வந்தது. அல்லாஹ் அன்னாருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாருடைய பிள்ளைகளுக்கும் அன்னாருடைய நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

அடுத்து மூன்றாவது ஜனாஸா காயிப் பாகிஸ்தானின் ஃபைஸலாபாத் அதூவாலி ஜமாஅத்தின் தலைவர் மதிப்பிற்குரிய ஷரீஃப் அஹ்மத் பந்தேஷா ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னாரும் கடந்த நாட்களில் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாரின் மகனாகிய ஜமாஅத்தின் முரப்பி ரஹ்மத்துல்லாஹ் பந்தேஷா ஸாஹிப் கூறுகின்றார்கள்: எங்களது தந்தை வழிப்பாட்டனார் இரண்டு மூன்று மாத குழந்தையாக இருந்தபோது, அன்னாருடைய பெற்றோரும், ஏனைய அனைத்து நெருங்கிய உறவினர்களும், அன்பர்களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் காலத்தில் பிளேக் நோய் நாட்களில் இறந்து விட்டனர். அப்போது எனது தந்தை வழிப் பாட்டனாருடைய தூரத்து உறவினராகிய ஓர் அஹ்மதி குடும்பம் அன்னாரின் ஆரம்ப நாட்களில் அன்னாரைப் பராமரித்தது. பின்னர் பட்டாலா தஹ்ஸீலுடைய ஒரு நீதிபதியின் தீர்ப்பிற்கு ஏற்ப மற்றொரு அதிக நெருங்கிய உறவினராகிய அஹ்மதி குடும்பம் அன்னாரை பராமரித்தது. மேலும், இவ்வாறு அன்னார் ஆரம்பம் முதலே அஹ்மதி சமூகத்தில் பராமரிப்பு பெற்று வந்தார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்திருந்தார்கள்.

மர்ஹூம் குறைந்தபட்சம் 25 ஆண்டுகள் வரை கிராமத்தின் ஜமாஅத் தலைவராக இருந்து வந்தார்கள். எண்ணற்ற சிறப்புகளுக்கு சொந்தக்காரராகவும், ஓர் எளிமையான குணம் படைத்த மனிதராகவும் இருந்தார்கள். இறை வணக்கங்களில் உயர்ந்த அந்தஸ்தின் தரத்தை பெற்றிருந்தவராகவும், வறியவர்கள் மற்றும் குறிப்பாக அன்பர்கள், உறவினர்களுக்கு உதவி செய்யக்கூடியவராகவும் இருந்தார்கள். மேலும் ஜமாஅத் அமைப்பு மற்றும் கிலாஃபத்துடன் எல்லையற்ற அன்பு செலுத்தக் கூடிய நபராக இருந்தார்கள். மர்ஹூம் தமது நினைவாக பின்விட்டுச் சென்ற உறவினர்களில் ஐந்து மகன்களும், மூன்று மகள்களும் அடங்குவர். நான் கூறியது போன்று அன்னாரின் ஒரு மகன் ரஹ்மத்துல்லாஹ் பந்தேஷா ஸாஹிப் ஜமாஅத்தின் முபல்லிஃக் ஆவார். அவர் இன்றைய நாட்களில் ஜெர்மனியின் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் ஆசிரியராக தொண்டாற்றும் நற்பேறு பெற்று வருகின்றார். மேலும், தமது கிராமத்தின் எதிர்ப்பின் சூழலின் காரணமாக தமது தந்தையின் ஜனாஸாவிலும் நல்லடக்கத்திலும் குறித்த நேரத்தில் அவரால் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. மேலும் மர்ஹூமின் அனைத்து பிள்ளைகளுக்கும் அன்னாரது நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

தமிழாக்கம் :

மவ்லவி A.அப்துர் ரஹ்மான் தாஹிர்.

* * * * *

# ஜுமுஆ பேருரை

**மஜ்லிஸே ஷூராவின் முக்கியத்துவம் மற்றும் அதன் உறுப்பினர்களின் பொறுப்புகளைக் குறித்த ஆழிய ஞானம் நிறைந்த பேருரை**

**மஜ்லிஸே ஷூரா என்பது ஆலோசனை வழங்கக் கூடிய சபை ஆகும். அது தீர்ப்பு வழங்கக் கூடியது அல்ல.**

**ஆலோசனை கொடுக்கக் கூடியவர்கள் எப்போதும் இதனை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது அவர்களின் ஆலோசனைகள் நல்லெண்ணம் மற்றும் இறையச்சத்தின் உயர் தரத்திற்கு ஏற்ப அமைந்திருக்க வேண்டும்**

**உங்களது செயல் முன்மாதிரி, மக்களிடத்தில் நேசம் மிகு தொடர்பு, அவர்களைக் குறித்த வேதனையை உள்ளத்தில் கொள்வது, அவர்களுக்காகவும், தமக்காகவும் துஆ செய்வது, காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுதலின் தரத்தை உயர்த்துவது போன்றவை ஒவ்வொரு பொறுப்பாளர் மற்றும் மஜ்லிஸே ஷூராவின் ஒவ்வொரு உறுப்பினருடைய சிறப்பான தனித்தன்மையாக ஆகிவிட்டால் பின்னர் அந்நிலையில்தான் ஒட்டுமொத்த ரீதியில் ஜமாஅத்தில் ஒரு புரட்சிகரமான மாற்றம் உருவாகுவதை நம்மால் காண முடியும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 12 மே 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **12ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

எவ்வாறு இருப்பினும், அவர்கள் இந்தத் தவறை செய்தார்கள் என்பதனால், தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள் தங்களது இந்த செயலில் பாவம் செய்தவர்கள் ஆவர். அவர்கள் தங்களது உரிமையை (சரியாக) செலுத்தவில்லையென்றால் அவர்கள் இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். ஆனால் எந்த பிரதிநிதிகளிடம், இன்னும் கூறப்போனால் இதில் நான் பொறுப்பாளர்களையும் சேர்த்துக் கொள்கின்றேன். அதாவது அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்ட பிறகு செயல் மற்றும் ஆன்மிக நிலையில் என்ன தரம் இருக்க வேண்டுமோ அந்த தரம் அவர்களிடம் இல்லையென்றால் பின்னர் அவர்கள் இனி இஸ்திக்ஃபார் செய்தவாறு, தங்களது நிலைமைகளில் நேர்மறையான மாற்றத்திற்கான உறுதிமொழி எடுத்துக் கொண்டவாறும், இறையச்சத்தின் வழி நடப்பதற்கு முழுமையான முயற்சிகள் செய்தவாறும், தங்களை தாங்களே அமானிதத்திற்கான உரிமையை ஹெத்துவதற்கு தகுதி வாய்ந்தவர்களாக ஆக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த முயற்சி நடைபெறும்போது எங்கு அல்லாஹ்வின் திருப்தியை அவர்கள் பெறுபவர்களாக இருப்பார்களோ அங்கு அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை நிறைவேற்றுவதில் உதவியாளர்களாகவும் ஆகிக் கொண்டிருப்பார்கள். மேலும், தங்களது செயல் மற்றும் ஆன்மிக நிலைமைகளையும் சிறந்ததாக ஆக்கிக் கொண்டிருப்பார்கள்.

நான் கூறியதுபோன்று (ஷூரா) பிரதிநிதித்துவ(கால)ம் ஓர் ஆண்டு வரை ஆகும். இந்தக் காலத்தில் நிர்வாகத்துடன் ஒத்துழைக்கவும் வேண்டும். மேலும், தீர்மானங்களின் மீது சுயமும் அமல் செய்ய வேண்டும். மேலும் அமல் செய்ய வைக்கவும் வேண்டும். இந்த விஷயத்தை அடைவதற்காக, உங்களது ஜமாஅத்தில் அதன்படி அமல் செய்யப்படுகின்றதா? இல்லையா? அல்லது எந்த அளவிற்கு அமல் செய்யப்படுகின்றது? மேலும் எவ்வாறு காலத்தின் கலீஃபா தீர்ப்பு வழங்கினாரோ அதற்கேற்ப அமல் செய்யப்படுகிறதா? என்று நீங்கள் எப்போதும் கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும்.

எனவே, நீங்கள் காலத்தின் கலீஃபாவின் உதவியாளராக ஆக வேண்டும். சிலமுறை இந்த விஷயம் காணக் கிடைக்கின்றது. அதாவது, ஜமாஅத்துகளுக்கு சென்ற பிறகு தீர்மானங்கள் பொறுப்பாளர்களின் சோம்பேறித்தனத்திற்கு இலக்காகி விடுகின்றன. மேலும் என்ன தீர்ப்புகள் வழங்கப்பட்டனவோ அவற்றின்படி அமல் செய்யப்படால் இருக்கின்றது. எனவே அதுபோன்ற நிலைமையில் (ஷூராவின்) பிரதிநிதிகளின் பணி என்னவென்றால், அவர்கள் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு மட்டுமே கவனமூட்டக் கூடாது. மாறாக, பொறுப்பாளர்களுக்கும் அவர்களின் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்ட வேண்டும். அதன் பிறகும் அவர்கள் கவனம் செலுத்தவில்லையென்றால், மேலும் அந்த ஆலோசனைகளின் படி எவ்வாறு அமல் செய்யப்பட வேண்டுமோ அவ்வாறு அமல் செய்யப்படவில்லையென்றால் பின்னர் தலைமையகத்திற்கு எழுதுங்கள்.

அதேபோன்று ஏராளமான பொறுப்பாளர்களும் ஷூராவின் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். தங்களது துறையின் பணிகளைப் பார்ப்பது மட்டுமே அவர்களின் பணி இல்லை. மாறாக, ஷூராவின் ஆலோசனைகள் மற்றும் காலத்தின் கலீஃபா வழங்கிய தீர்ப்புகளில் அமல் செய்யப்படாமல் இருப்பதையும் தீவிரமாக கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் தமது துறையாக இருந்தாலும் சரி அல்லது மற்றவரின் துறையாக இருந்தாலும் சரி சம்பந்தப்பட்ட பொறுப்பாளர் மற்றும் அமீருக்கு கவனமூட்ட வேண்டும். மேலும், செயற்குழுவிலும் இந்த விவகாரத்தை வைக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லையென்றால், அப்படிப்பட்ட பொறுப்பாளர்களும் மேலும் அப்படிப்பட்ட பிரதிநிதிகளும் தங்களது அமானிதத்திற்கான உரிமையை நிறைவேற்றவில்லை (என்று பொருள்). **இவ்வுலகில் சிலர் சாக்குப்போக்குகளைக் கூறி தப்பித்துவிடுவர். ஆனால், நினைவிற் கொள்ள வேண்டும். அல்லாஹ்விடம் எந்தவொரு விஷயமும் மறைந்திருக்கவில்லை. மேலும், அவன் அமானிதங்களை நிறைவேற்றுவது குறித்து கேள்வி கேட்பான். எனவே மிகவும் கவலை கொள்ள வேண்டிய இடம் ஆகும். நாங்கள் ஷூராவின் பிரதிநிதிகள் ஆவோம் அல்லது நாங்கள் பொறுப்பாளர்கள் ஆவோம் என்று இந்த விஷயத்தில் நாம் பெருமை கொள்ளக் கூடாது. மாறாக, தமது பொறுப்புகளைக் குறித்து ஒவ்வொருவரும் கவலை கொள்ள வேண்டும்.**

நான் கூறியதுபோன்று ஜமாஅத்துகளில் பொறுப்பாளர்களுக்கு கவனமூட்டியப் பிறகும் ஷூராவின் தீர்மானங்களின் படி அமல் செய்யப்படவில்லையென்றால், பிரதிநிதிகள் முயற்சி செய்கின்றனர். ஆனால், கவனமூட்டியப் பிறகும் அவர்கள் அதன்படி செயல்படவில்லையென்றால், பின்னர் தலைமையகத்திற்கு தகவல் கொடுங்கள். இதன்படி சில மக்கள் இப்போதும் கூட செயல்படுகின்றனர். அமல் செய்யப்படுவதில்லை என்பது கிடையாது. பொறுப்பாளர்கள் அமல் செய்யவில்லையென்றால் பின்னர் அவர்கள் தலைமையகத்திற்கு தகவல் கொடுக்கின்றனர். சில மக்கள் இதன்படி செயலாற்றுகின்றனர். ஆனால், பொதுவாக ஒரு பொறுப்பாளருடனான தனிப்பட்ட பகைமையின் அடிப்படையில் கருத்துவேறுபாடு உருவாகி விடும்போது அந்த நேரத்தில் இவர்கள் பேசுகின்றனர். இந்த வழிமுறை இறையச்சத்திற்கான

வழிமுறை கிடையாது. இறையச்சத்தின்படி செயல்பட்டவாறு ஒவ்வொரு பிரதிநிதியும், பொறுப்பாளரும் ஷூராவின் ஒப்புதல் நல்கப்பட்ட ஆலோசனைகளின் படி அமல் செய்தால் மேலும் அமல் செய்ய வைப்பதற்கு முயற்சி செய்தால், பின்னர் அந்த ஆலோசனைகள் மீண்டும் அடுத்த வருடம் அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஷூராவில் முன்வைக்கப்படுவதற்கு அனுப்பப்படும் சூழல் ஒருபோதும் உருவாகாது.

மீண்டும் அதே ஆலோசனைகள் வருவதன் பொருளே என்னவென்றால், அதன்டி ஒன்று முழுமையாக அமல் செய்யப்படவில்லை அல்லது எவ்வாறு நடைபெற்றிருக்க வேண்டுமோ அவ்வாறு நடைபெற்றிருக்கவில்லை. எனவே, இறையச்சத்தின் வழி நடப்பதற்கும், தமது அமானிதத்திற்கான உரிமையை செலுத்துவதற்குமான செயல் இதுவா? என்பதை அதுபோன்ற ஜமாஅத்துகள் மற்றும் பொறுப்பாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது கிலாஃபத்திற்கு கட்டப்படுவோம் மற்றும் நன்றியுணர்வுடன் இருப்போம் என்ற உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கான அமல் இதுதானா? என்று சிந்திக்க வேண்டும். (அந்தந்த) நாட்டிற்குள் இருக்கின்ற ஜமாஅத்துகளில் இந்த விஷயங்களின்படி அமல் செய்யப்படவில்லை என்பதை காணும்போதுதான் அவர்கள் தங்களது தலைமையகத்திற்கு அதுபோன்ற ஆலோசனைகளையே அனுப்புகின்றனர்.

அமல் செய்யப்படுகிறது என்றால் மேலும், எல்லா மட்டத்திலும் எந்த அளவிற்கு அமல் செய்யப்படுகின்றது என்று ஒவ்வொரு ஜமாஅத்திலும் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றதென்றால் பின்னர் அதே ஆலோசனைகள் மீண்டும் வரவும் செய்யாது. மேலும், இந்த ஆலோசனைகள் ஒரு வருடம் முன்னர் அல்லது இரண்டு வருடத்திற்கு முன்னர் முன்வைக்கப்பட்டுவிட்டன; எனவே இதனை ஷூராவில் முன்வைப்பதற்கு பரிந்துரை செய்யப்படவில்லை என்ற இந்த பரிந்துரையுடன் (ஒரு) நாட்டின் தலைமையகத்திற்கு காலத்தின் கலீஃபா அவர்களிடத்தில் அதனை அனுப்புவதற்கு அவசியமும் ஏற்படாது. **இந்த பதிலை எழுதும்போது ஒரு நாட்டின் தலைமையக நிர்வாகம் வெட்க உணர்வை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு எழுத வேண்டும். அதாவது, நாங்கள் வெட்கம் கொள்கின்றோம். எங்களால் அதன்படி அமல் செய்ய வைக்க முடியவில்லை; தற்போது இந்த ஆண்டு நாங்கள் இதன்படி அமல் செய்வோம் என்று அவர்கள் எழுத வேண்டும். அமல் செய்ய வைக்கவில்லையென்றால் நாம் குற்றவாளிகளாக இருப்போம். மேலும், எந்த மக்கள் தங்களது அமானிதத்தின் உரிமையை நிறைவேற்றவில்லையோ அந்த மக்களில் நாம் சேர்ந்துவிடுவோம் என்ற உணர்வு இதனால் ஏற்படும். எனவே இந்த வாசகங்களை அவர்கள் எழுத வேண்டும். மேலும், பின்னர் இவ்வாறு எழுதுங்கள். எனவே மிகவும் பணிவுடன் நாங்கள் மன்னிப்பு வேண்டியவாறு இந்த ஆலோசனையை இந்த ஆண்டு முன்வைக்காமல் இருப்பதற்கு பரிந்துரை செய்கின்றோம் என்று எழுத வேண்டும். இவ்வாறு செய்யும்போது பின்னர் பொறுப்பிற்கான உணர்வு உருவாகும். குறைந்தபட்சம் இதனால் நிர்வாகத்திற்கும் பிரதிநிதிகளுக்கும் இந்த உணர்வு ஏற்படும். அதாவது, நாங்கள் இதனை செய்துவிடுவோம்; அதனை செய்துவிடுவோம் என்று நாம் பெரும் பெரும் செயல் திட்டங்களை உருவாக்கி காலத்தின் கலீஃபாவிற்கு சமர்ப்பிக்கின்றோம். ஆனால் அதன்படி அமல் செய்வதில்லை. எனவே நாம் குற்றவாளிகள் ஆவோம். மேலும், காலத்தின் கலீஃபாவின் நம்பிக்கைக்கு காயத்தை ஏற்படுத்தக் கூடியவர்கள் ஆவோம் என்ற உணர்வு இதனால் அவர்களிடத்தில் ஏற்படும்.**

எனவே இந்த அடிப்படையில் எங்கு ஜமாஅத் அளவில் ஆய்வு செய்யப்படுமோ அங்கு தனிப்பட்ட ரீதியிலும் பொறுப்பாளர்களும், ஷூரா பொறுப்பாளர்களும் தங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். மேலும் இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். மேலும், பின்னர் அதன்படி செயல்படாமல் இருந்ததற்கான காரணங்களையும் எல்லா மட்டத்திலும் அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்யப்பட வேண்டும். அந்தந்த நாடுகளுக்குள் இந்த ஆய்வை செய்வதற்கு அவசியம் உள்ளது. அதாவது சில Active ஜமாஅத்துகள் நூறு சதவிகிதம் இல்லையென்றாலும் எழுபது, எண்பது சதவிகித ஆலோசனைகளின் படி அமல் செய்துவிடுகின்றன. மேலும் காலத்தின் கலீஃபாவின் ஒப்புதலுடன் நமக்கு இந்த செயல் திட்டம் கிடைத்துள்ளது. நாம் காலத்தின் கலீஃபாவின் நம்பிக்கையில் காயத்தை ஏற்படுத்திவிடக் கூடாது என்ற ஆர்வத்துடன் அவர்கள் பணி செய்கின்றனர். எனவே ஜமாஅத்துகளில் இந்த உணர்வுகள் இருக்கின்றனவா? என்று ஆய்வு செய்ய வேண்டும். மேலும், எந்த உணர்வின் கீழ் அந்த ஜமாஅத்தின் உறுப்பினர்களிடம் இந்த புரட்சிக்கான உணர்வு இருக்கின்றதா? என்று ஆய்வு செய்ய வேண்டும். அதுபோன்ற சுறுசுறுப்பான ஜமாஅத்துகளின் பொறுப்பாளர்களுடன் பலவீனமான ஜமாஅத்துகளின் பொறுப்பாளர்களுக்கு கூட்டம் நடத்தப்பட வேண்டும். மாறாக, தலைமையக பொறுப்பாளர்களுடனும் கூட்டம் நடத்தப்பட வேண்டும். மேலும் அவர்களின் அனுபவங்களிலிருந்து பயனடையச் செய்ய வேண்டும். ஓர் இடத்தில் ஒரு ஜமாஅத் கூட செயல் மிக்கதாகவும், தமது செயல்நிலை மற்றும் ஆன்மிக நிகழ்ச்சிகளில் முழுமையாக அமல் செய்யக் கூடியதாக இருக்கின்றதென்றால் பின்னர் மற்ற பத்து ஜமாஅத்துகளுக்கு தமது வழிமுறையை பகிர்ந்து கொள்வதால் பயனடையச் செய்ய முடியும். ஆனால், தலைமையக அமைப்பிலுள்ள ஒவ்வொரு செயலர்களும், பொறுப்பாளர்களும், ஷூராவின் பிரதிநிதிகளும் தங்களது பங்களிப்பை நேர்மையுடன் செலுத்தும்போதுதான் இது நிகழும்.

சில ஜமாஅத்துகள் அல்லது நாடுகள் இந்த ஆய்வையும் செய்துள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் ஷூராவில் என்னென்ன தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளனவோ அவற்றில் எந்த அளவிற்கு அமல் செய்யப்பட்டுள்ளன: மேலும் அமல் செய்யப்பட்டு வருகின்றன என்று ஆய்வு செய்துள்ளன. பின்னர் அவர்கள் அதனுடைய காலாண்டு ஆய்வு அறிக்கையை தலைமையகத்திற்கு அனுப்புகின்றனர். இந்த பயன் அதனால் கிடைத்துள்ளது. இந்த ஆலோசனை இரண்டு ஆண்டிற்கு முன்னர் முன்வைக்கப்பட்டுவிட்டது. எனவே முன்வைக்கப்படாது என்று நாம் கூறிவிட்டு அமர்ந்து விடக் கூடாது; மாறாக, நாம் இந்த செயல் திட்டத்தின்படி அமல் செய்து நாங்கள் இந்த அளவிற்கு இலக்கை அடைந்துவிட்டோம். இன்னும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம் என்ற இந்த அறிக்கையை நாம் தலைமையகத்திற்கு கொடுக்க வேண்டும் என்ற உணர்வு அவர்களிடம் (தற்போது) ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் அதுபோன்ற ஜமாஅத்துகளில் பொறுப்பிற்கான உணர்வு அதிகரித்துள்ளது. **வெறும் வாய்ப்பேச்சுகளால் நாம் உலகை வெற்றி கொள்ள முடியாது. அதற்கு செயல் அவசியம் ஆகும்.**

எங்கு வலிமையான திட்டம் வகுப்பதற்கான அவசியம் உள்ளதோ அங்கு செயல் ரீதியிலான முயற்சிகளுக்கும் அவசியம் உள்ளது. தங்களது இறை வணக்கத்தின் தரத்தை அடைவதும் அவசியம் ஆகும். பொறுப்பாளர்களும், ஷூராவின் பிரதிநிதிகளும் தங்களது இறை வணக்கத்தின் தரத்தை மேம்படுத்திக் கொள்வதன் பக்கம் கவனம் செலுத்தினால், மேலும் பள்ளிவாசல்களை நிரப்புவதற்காக தங்களது செயல் முன்மாதிரியை வெளிப்படுத்தினால் பின்னர் பள்ளிவாசல்களுக்கு வருபவர்களின் எண்ணிக்கையும் மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகரித்து விட முடியும். அதற்கான ஆய்வையும் நாம் செய்ய வேண்டும். **எனவே உங்களது செயல் முன்மாதிரி, மக்களுடன் அன்பு மற்றும் நேசம் மிகு தொடர்பு, அவர்கள் மீதான வேதனையை உள்ளத்தில் கொள்வது, அவர்களுக்காகவும், உங்களுக்காகவும் துஆ செய்வது, காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுதலுக்குரிய தரத்தை உயர்த்துவது, ஒவ்வொரு பொறுப்பாளர் மற்றும் ஷூராவின் உறுப்பினரின்**

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 06 July 2023 Issue No. 27

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**சிறப்பான தனித்தன்மையாக இருக்கும்போதுதான் ஒரு புரட்சிகரமான மாற்றம் ஒட்டுமொத்த அளவில் ஜமாஅத்தில் உருவாகுவதை நாம் காண்போம்.**

ஒரு மாபெரும் பணி நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நோக்கம் மற்றும் அன்னாரின் பணி என்பது ஒரு சாதாரண பணி அல்ல. உலகில் இஸ்லாத்தின் அழகிய தூதுச் செய்தியை எட்டவைத்து உலகை ஏக இறைவணக்கம் செய்யக் கூடியதாக ஆக்குவதற்கு தொடர் முயற்சி அவசியம் ஆகும்.

உலகில் எல்லா நாடுகளிலும் ஷூரா ஏன் நடத்தப்படுகின்றது? ஏனென்றால் எங்கு நாம் நமது செயல் நிலைகளை சரியாக்குவதற்கு திட்டம் வகுப்போமோ அங்கு ஏக இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கும் உலகை ஒரே சமுதாயமாக ஆக்குவதற்கும், உலகை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கொண்டு வருவதற்காகவும், ஒரு புரட்சியை ஏற்படுத்தக் கூடிய அதுபோன்ற செயல்திட்டங்களை வகுக்க வேண்டும். எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, இந்த அனைத்து பணியை நிறைவேற்றுவதற்கு பணத்திற்கும் அவசியம் உள்ளது. செல்வத்திற்கும் அவசியம் உள்ளது. எனவே, குறைந்தபட்ச செலவினங்களில் நாம் அதிகஅதிகமாக பயனடையும் வகையில் உங்களது பொருளாதார பட்ஜெட்டையும் உருவாக்க வேண்டும். ஜமாஅத் உறுப்பினர்களின் பெரும்பான்மை ஏழைகள் மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த மக்கள் ஆவர். எனவே நமது சந்தாக்களின் வருமானத்தில் எப்படிப்பட்ட அழகியத் திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்றால் அதனால் குறைந்தபட்ச செலவில் மார்க்கத்தை பரப்புதல் மற்றும் பிரச்சார பணியை அதிகஅதிகமாக செயல்படுத்த கூடியதாக இருக்க வேண்டும். நாம் இறையச்சத்தின் வழி நடந்தவாறு நமது பொறுப்புகளையும், அமானிதங்களையும் செலுத்த வேண்டும். மேலும் மார்க்கத் தொண்டினை ஓர் இறையருளாக கருத வேண்டும் என்ற இந்த உண்மைத்துவத்தை நாம் புரிந்து கொண்டவர்களாக ஆகிவிடும்போதுதான் நம்மால் அந்தப் பணியை செய்ய முடியும்.

ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) இறையச்சத்தின் வழியில் நடப்பதற்கு அறிவுரை செய்தவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِنْ تَتَّقُوا اللّٰهَ يَجْعَلْ لَّكُمْ فُرْقَانًا وَّيُكَفِّرْ عَنْكُمْ سَيِّاٰتِكُمْ (9:30)

وَيَجْعَلْ لَّكُمْ نُوْرًا تَمْشُوْنَ بِهٖ (57:29)

அதாவது நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் இறையச்சம் கொண்டவர்களாக இருப்பதில் உறுதிப்பாட்டுடன் இருந்தால், மேலும் அல்லாஹ்விற்காக இறையச்சத்தின் பண்பில் நிலைநின்று உறுதிப்பாட்டை மேற்கொண்டால் பின்னர் இறைவன் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் மத்தியில் வித்தியாசத்தை ஏற்படுத்தி விடுவான். அந்த வித்தியாசம் என்னவென்றால், உங்களுக்கு ஓர் ஒளி வழங்கப்படும். அந்த ஒளியுடன் நீங்கள் உங்களது அனைத்து வழிகளிலும் வழிநடப்பீர்கள். அதாவது அந்த ஒளி உங்களது அனைத்து செயல்கள், கூற்றுகள், ஆற்றல்கள் மற்றும் உணர்வுகளில் வந்து விடும். உங்களது அறிவிலும் ஒளி இருக்கும். உங்களது ஒவ்வொரு அனுமான விஷயத்திலும் ஒளி இருக்கும். உங்களது கண்களிலும் ஒளி இருக்கும். உங்களது காதுகளிலும், உங்களது நாவுகளிலும், உங்களது பேச்சுகளிலும் உங்களது ஒவ்வொரு அசைவிலும், ஓய்விலும் ஒளி இருக்கும். மேலும், நீங்கள் எந்த வழிகளில் செல்வீர்களோ அந்த வழிகள் ஒளிமயமானதாக இருக்கும். சுருக்கமாக, உங்களுடைய ஆற்றலுக்கான மற்றும் உங்களுடைய உணர்வுகளுக்கான எவ்வளவு வழிகள் இருக்குமோ அவை அனைத்தும் ஒளியால் நிறைந்துவிடும். மேலும் உச்சி முதல் பாதம் வரை நீங்கள் ஒளியிலேயே நடப்பீர்கள். (ஆய்னாயே கமாலாத்தே இஸ்லாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 5, பக்கம் 177 -178)

அல்லாஹ் நம் அனைவருக்கும் இறையச்சத்தின் வழியில் நடந்தவாறு நமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான நற்பேறை வழங்குவானாக. அல்லாஹ் நமது தவறுகள், கவனக்குறைவுகள் மற்றும் பலவீனங்களின் மீதும் திரையிட்டவாறு எப்போது தனது அருளை நல்கிக் கொண்டே செல்வானாக.

தமிழாக்கம்: முபல்லிஃக் A. அப்துர் ரஹ்மான் தாஹிர்.

## தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)

ஆக்கிக் கொள்ளாதே!. ஆணவங் கொண்ட மனிதனின் வாழ்க்கை மிகவும் கசப்பானதாகவே கழிகின்றது என்பதை தற்பெருமை கொண்ட மக்களை காண்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்த மக்கள் அறிவார்கள். ஏனெனில் ஒருபக்கம் அவர் தன்னைத் தானே ஒரு வியக்கத்தக்க ஒன்றாக கருதிக் கொள்கின்றார். மற்றொரு பக்கம், அவருக்கு தனது நாட்டின் குடிமக்களுடன் இணைந்து வாழ நேரிடுகின்றது. எனவே, நீர் ஆணவம் கொண்டு சமுதாயத்தின் தலைவராக ஆகிவிட முடியாது. சமுதாயத்தின் அறிஞர்களுடனும் இணைந்து விட முடியாது என்று இந்த வாக்கியத்தில் கூறப்பட்டுள்ளது. ஏனெனில், ஆணவம் உங்களை உங்களது சமுதாயத்திடமிருந்து விலக்குகின்றது. அதேபோன்று இறைவனிடமிருந்தும் விலக்குகின்றது. எனவே நீங்கள் பெருமையையே வேண்டக் கூடியவராக இருக்கின்றீர்கள் என்றாலும் ஆணவத்தால் உங்களுக்கு நீங்களே பாதிப்பை ஏற்படுத்திக் கொள்கின்றீர்கள். ஏனெனில், எந்த விஷயத்தை உங்களது உள்ளம் விரும்புகின்றதோ அந்த விஷயத்திலிருந்து இந்த (ஆணவச்) செயலால் உங்களை நீங்களே இழப்பிற்குரியவர்களாக ஆக்கிக் கொள்கின்றீர்கள். எனவே ஆணவம் கொள்ளாதீர்கள். உன்னிடத்தில் ஏதாவது உலகியல் சிறப்பு உள்ளதென்றால் சமுதாயத்தின் தலைவராக ஆகிவிடுவதற்காக நீ அதன் உதவியால் சமுதாயத்திற்கு நன்மை பயப்பாயாக. ஏதாவது மார்க்கச் சிறப்பு இருக்குமென்றால் அதன் மூலம் சமுதயாத்திற்கு நன்மை பயப்பாயாக. அதனால் நீ இறைவனின் பார்வையில் விருப்பத்திற்குரியவராக ஆகிவிடலாம்.

எவ்வளவு நுட்பமான வடிவில் இங்கு ஆணவம் கொள்வதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளது. இதற்கு நிகரான ஒன்றை கூட உலகின் எந்தவொரு வேதமும் முன்வைக்க முடியாது.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 335, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

**National Watch Company**

**Sales & Service**




**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad